Registered as a Newspaper பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

The Eelanaatham மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 10 24 - 05 - 1994 செவ்வாய்க்கிழமை ஓசை 95

## உலகில் தற்கொலை செய்வோரில் சிறிலங்கா இரண்டாமிடம்

தற்கொலை போக்கு, மனத்தளர்வு, மனவிரக்தியுடையவர்களுக்கு ஆறுதல் அறிவுரை வழங்குதல் குறித்த சர்வதேச மாநாடு கொழும்பில் ஆரம்பமாகியுள்ளது. 18 நாடுகள் இதில் கலந்து கொள்கின்றன- உலகில் தற்கொலை செய்பவர் அதிகமாக உள்ள நாடு ஹங்கேரி எனவும் இரண்டாவது இடத்தை சிறிலங்கா பெற்றுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது- கடன் சுமை, காதல்தோல்வி என பல விடயம் காரணமாக இலங்கையில் தற்கொலை நடைபெறுவதாகவும் தினமும் 20 பேர் தற்கொலை செய்வதாகவும் இதேபோன்று ஐந்து மடங்கினர் தற்கொலை முயற்சியில் இறங்குவதாகவும் (6 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழீழத்தின் வைப்பகம் யாழ். நகரில் உதயம்

## பெருமளவு பொதுமக்கள், வர்த்தகர் நிதி வைப்புச் செய்தனர்

(நமது நிருபர்)

**தமிழீழத்தின் முதலாவது வைப்பகம் யாழ். நகரில் நேற்று நண்பகல் தனது சேவையைத் தொடங்கியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, பணத்தை வைப்பிலிட்டு சம்பிரதாய பூர்வமாக கணக்கைத் தொடங்கி வைத்தார். இதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான பொதுமக்களும், வர்த்தகர்களும் பணத்தை தமிழீழ வைப்பகத்தில் வைப்புச் செய்தனர்.**

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தஇத்தமிழீழவைப்பகத் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்ட விடுதலைப் புலிகள் நிதித்துறைப் பொறுப்பாளர் திரு தமிழேந்தி அவர்கள் மாணவர்கள் எழுச்சிக் கீதம் இசைக்க தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

மங்கள விளக்கை தமிழீழ அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன்,காவல்துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

விடுதலைப் போரில் இன்னுயிர் ஈந்த மாவீரர்களுக்கும் பொது மக்களுக்கும் இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் தமிழீழ வைப்பக பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்தும் நாடாவை வெட்டியும் வைபவரீதியாக தமிழீழ வைப்பகத்தை திறந்து வைத்தார்

இதனையடுத்து விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் மற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மாவட்ட ரீதியாக தமிழீழவைப்பகங்கள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழப் பிரதேசத்தில் மாவட்ட ரீதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினரினால் ''தமிழீழ வைப்பகங்கள்'' திறந்து வைக்கப் படவுள்ளன

இதன் முதற்கட்டமாகவே நேற்று யாழ் கன்னாதிட்டிச் சந்தியில் முதலாவது தமிழீழ வைப்பகம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

இத்தகைய தமிழீழ வைப்பகங்கள் மூலம் தமிழீழ மக்கள் பெரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

இவற்றில் தமிழீழ மக்கள் நடைமுறைக் கணக்கு, தேட்ட (சேமிப்பு) கணக்கு, நிலையான வைப்புக் கணக்கு போன்ற கணக்குகளை ஆரம்பிக்க முடியும் என்பதுடன் மேம்பாட்டுக் கடன், அடகுக் கடன், வாணிபக்கடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)



யாழ் நகரில் முதலாவது தமிழீழ வைப்பகத்தை தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் திறந்து வைப்பதையும், அருகில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழீழக்காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன், நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோருடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒரு பகுதி மக்களையும் மேலுள்ள படத்தில் காணலாம்.

# ஜனாதிபதி வேட்பாளராக சிறிமாவோ கட்சி செயற்குழுக் கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனது வேட்பாளராக கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவை (78) தெரிவு செய்துள்ளது.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற கட்சியின் தேசியக் கமிட்டியினால் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டார். இவர் பின்னால் பாராளுமன்ற ஜனநாயக முறை மீண்டும் ஏற்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி ஆட்சிமுறை நீக்கப்படும் எனவும் கூறினார். சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால் சோசலிச பொருளாதாரத்திலிருந்து முதலாளித்துவ பொருளாதாரத்தை கடைப்பிடிக்கும் வகையில் கட்சியின் கொள்கையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது மூன்றாண்டுகளுக்கு பின் கட்சியின் தேசிய கமிட்டி கூடியுள்ளது.

## கட்சித் துணைத்தலைவர் சந்திரிகா குமாரணதுங்கா

(கொழும்பு)

தெரிவானார்.

# தனியரசிற்கான அமைப்புக்களை நாம் கட்டி எழுப்பி வருகின்றோம்

# நாம கட்டி எழுப்பி வருகின்றோம்

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசு எமது பிரச்சினையில் அக்கறை காட்டாவிட்டாலும் இங்கு தமிழ் மக்கள் தமக்கென்று ஒரு ஆட்சி அமைப்பை நிறுவிக் கொண்டிருக்கின்றனர். எமது போராட்டமும் படிப்படியாக பலம் பெற்று வருகிறது. இதன் இறுதி ஒரு தன்னாட்சியாக, தனியரசாக உருப்பெறும் சாத்தியக்கூறுகளே உள்ளன அதற்கேற்ற வகையில் அப்படியான ஓர் அமைப்பை நாம் கட்டியெழுப்பியுள்ளோம்

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் நிதித்துறையினரால் ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ வைப்பகத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்

அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது இன்றைய நாள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள் எமது வரலாற்றில் முதல் தடவையாக தமிழீழ மக்களுக்கென இந்த வைப்பகம் திறக்கப்படுகிறது தேசிய நிர்மாண பொருளாதாரத்தின் படிக்கல்லாக இம்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது

இங்கு ஒரு யுத்தம் நடக்கிறது இனப்பிரச்சினை தீர்ந்தபாடில்லை எதிரி குண்டு வீச்சுக்களையும் அழிப்பு வேலைகளையும் தொடர்கின்றான் இச் சூழலில் ஏன் இது அவசியம் எனும் கேள்வி எழலாம் எமது போராட்ட வரலாறு முடியாத ஒரு தொடர் கதையாக 40 ஆண்டுகள் தொடர்ந்து நடக்கிறது எதிரியானவன் எமது பிரச்சினைக்கான தீர்வை முன் வைப்பான் என எதிர்பார்த்து எமது முன்னைய சந்ததியினர் ஏமாற்றப்பட்டார்கள் எமது உரிமைகளை எதிரி தந்துவிடுவான் அவனது தயவு தாட்சண்யத்தில் எமது உரிமை கிடைக்கும் என எமது இன்றைய தலைமை இருக்கவில்லை

எமது இயக்கத்தின் வரலாறு வித்தியாசமானது எமது மண்ணை நாம் மீட்டெடுக்க வேண்டும். எமது மண்ணில் ஒரு தன்னாட்சி, தமிழர்களுக்கான ஒரு சுயாட்சி உருவாக்க வேண்டும். எம் தன்னிறைவான பொருளாதாரத்தை கட்டி எழுப்பவேண்டும். எமது மக்கள் எமது நிர்வாகத்தைக் கொண்டு நடாத்த வேண்டும் என்ற உறுதிப்பாட்டில் நாம் எமது போராட்டத்தை நடாத்தி வருகிறோம் கடந்த பதினைந்து ஆண்டுகளாக இரத்தம் சிந்தி நடைபெறும் எமது போராட்டம் ஒரு குறிக்கோளுடன் சென்று கொண்டிருக்கிறது. எமது ஆட்சி அமைப்பை, எமது நிர்வாகத்தை படிப்படியாக கட்டி எழுப்ப வேண்டுமென்ற உறுதிப்பாட்டுடன் இந்தப் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கிறோம்.

எதிரி எமது மண்ணை கபளீகரம் செய்வதற்கும்

[6ஆம் பக்கம் பார்க்க]

# தமிழர் பொருண்மியத்தை உயர்த்த தலைவர் பிரபாகரன் இட்ட திட்டம்

## தமிழீழ வைப்பக திறப்புவிழாவில் தமிழேந்தி

தமிழர்களுக்கான ஒரு வைப்பகத்தை - வங்கி அமைப்பை தொடங்க வேண்டுமென்று நீண்ட நாட்களாக நாங்கள் எண்ணியிருந்தோம் எமது தலைவர் எங்களுடைய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஒரு முன் முயற்சியை நாங்கள் மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணப்பாட்டைக் கொண்டிருந்தார் கடந்த காலத்தில் இங்கே இருக்கின்ற சிறிலங்காவினுடைய வங்கிகள் சிறப்பாக செயலாற்றாத காரணத்தினால் நாங்கள் எங்களுக்கென்று - ஒருசிறப்பான முறையிலே தமிழ் மக்களினுடைய பொருண்மியத்தை மேம்படுத்தக்கூடியதாக-அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி விடக்கூடியதாக ஒரு வைப்பகத்தை தொடங்குவதற்கு முடிவு செய்தோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி நேற்று கன்னாதிட்டிச் சந்தியில் திறந்து வைக்கப்பட்ட தமிழீழ வைப்பகம் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார் தொடர்ந்து தெரிவிக்கையில்:

கடந்த காலத்திலே 91 92 93ஆம் ஆண்டுகளில் பலமுறை இங்கே இருக்கக் கூடிய சிறிலங்காவின் வைப்பகங்களின் நிர்வாகிகளை அழைத்து இங்கே திரட்டப்படுகின்ற பணத்தை எமது மக்களின் வாழ்விற்காக செலவிடுங்கள் கடன்களைக் கொடுங்கள் எனக் கேட்டோம் முன்பெல்லாம் கடன் கொடுத்தார்கள். இப்பொழுது அவர்கள் அந்த நிலையில் இல்லை

ஒரு கட்டத்திலே நாங்கள் கேட்டபோது அவர்கள் நாங்கள் இங்கே மேலதிகமாகப் பணத்தை வைத்திருக்க முடியாத சூழ்நிலையில் இருப்பதாகச் சொன்னார்கள்

இங்கே திரவப்பணத்திற்கான தட்டுப்பாடுகூட இடைக்கிடை வருவதுண்டு அந்த நிலையை நீக்குவதற்கு பணத்தை வைத்திருக்க முடியாதா என்று கேட்டபெழுது தங்களுக்கு அதற்குரிய நஷ்டஈட்டுக் காப்புறுதி-இன்சூரன்ஸ் இல்லை என்று கூறி அந்தப் பணத்தைக் கூட வைத்திருக்க மறுத்தார்கள் இங்குள்ள ஊழியர்கள் மறுப்பதற்கு முழுமையான நியாயமுண்டு ஏனென்று சொன்னால் அவர்கள் சிறிலங்கா அரசாங்கத்

(6ஆம் பக்கம் பார்க்க)

பதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட்டார். இவர் பின்னர் கட்சி அலுவலர்களிடையே பேசுகையில் தமது கட்சி அரசாங்கத்தை அமைத்

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காஙரநகரில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்று முன் தினம் மாலை 6. 25 மணியளவில் மக்கள் குடியிருப்புக்களை நோக்கி பலத்த எறிகணை வீச்சினை மேற்கொண்டனர் அத்தோடு இப்பகுதிகளை நோக்கி கலிபர் வேட்டுக்களையும், துப்பாக்கிவேட்டுக்களையும் தீர்த்தவண்ணம் இருந்தனர். இச்சம்பவங்களின் போது பாரிய சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிய வருகிறது.

## நோயாளிகள் கவனத்திற்கு

நாளை மறுதினம் வியாழக்கிழமை நோயாளர்களுடன் கொழும்பு செல்லவிருந்த கப்பல் மறுதினம் வெள்ளிக்கிழமையன்றே கொழும்புக்குச் செல்லவிருப்பதாகவும், சம்பந்தப்பட்டவர்களை இரண்டு நாட்களுக்குத்தேவையான உணவு, தண்ணீருடன் வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணிக்கு யாழ் | பொது வைத்தியசாலைக்கு வருமாறும் பணிப்பாளர் கேட்டுக் கொள்கின்றார்.

## இன்று படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும்என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

(கொழும்பு)

சுதந்திரக்கட்சியின் துணைத் தலைவராக சந்திரிகா குமாரணதுங்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார். நேற்று நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே கட்சித் துணைத் தலைவராக இவர் தெரிவானார்;

இச் செயற்குழுவிலேயே ஜனாதிபதி வேட்பாளராக இவரின் தாயாரும் கட்சித் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவானது குறிப்பிடத்தக்கது.

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## புலிகளின் அதிரடிக்கு இரு பொலிசார் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் இரு பொலிசார் பலியாகினர்- ஆறலசன் குடா என்ற இடத்திலிருந்த பொலிஸ் காவலரண் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டது.

நேற்று நடைபெற்ற இத் தாக்குதலில் மேலும் ஐந்து பொலிசார் காயமடைந்தனர் என கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## எதிர்பாராத மோதலில் லெப். கவி வீரச்சாவு

மாமுனைக் கடற்பகுதியில் நேற்று முன் தினம் இரவு பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் கடற்



படையினருடன் இடம்பெற்ற எதிர்பாராத மோதலின் போது விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

வீரச்சாவடைந்த கடற்புலி லெப்டினன்ட் கவி/இளமாறன் (சுவாமி நாதன் கிங்சிலி றோய், 1-ம் குறுக்குத் தெரு, 1-ம் நம்பர் வசந்தபுரம், கொழுப்புத்துறை யாழ்ப்பாணம்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இந்த மாவீரரது வித்துடல் இன்று காலை 8.00 மணிககு குருநசர் கென்றி வீதியில் உள்ள அவரது தற்போதைய இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வசந்தபுரம் ச. ச. நிலையத்தில் வைக்கப்படும் அதைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டமும் நடைபெறும். இதனைத்தொடர்ந்து இறுதி இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு புனித விதை குழியில் விதைக்கப்படும்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

ஆசிரியர் நியமன பரீட்சைக்கு:- (1) பொது அறிவு (2) பொது உளச்சார்பு (3) கல்வியின் புதிய பாதை (4) இலக்கணத்தேறல் ஆகிய நூல்களை நேரடியாகப்பெற V.A. சிவராசா (சோதிடர்) 152.B. அரசடி வீதி கந்தர் மடம். (சி-9506)

## "மில்க்வைற்"

மக்கள் அபிமானம் பெற்ற மில்க்வைற் நீலசோப், சலவைத்தூள், பார்சோப் எங்கும் கிடைக்கிறது. மொத்தத் தேவைக்குத் தொடர்பு கொண்டால் உங்கள் கடைவாசலிலேயே கிடைக்கும் மில்க்வைற் மேலுறைகள், வெற்றுப்பக்கற்றுகளுக்கு வழமைபோல் அன்பளிப்புகள். மில்க்வைற்'' (சி-9498)

## தவறிவிட்டது

22-05-94 அன்று சின்னக்கடைக்கும் - பற்றிக்ஸ் வீதிக்கும் இடையில் பிலிப் செல்வராணி என்பவருடைய கைச் சங்கிலி தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம்காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் (8366)

## பெற்றுக் கொள்ளவும்

23-05 94 அன்று திருநெல்வேலி சிவன் கோயில் வீதியில் பேர்சுடன் சில தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஆதாரம் காட்டிப் பெறவும் தொடர்பு:- க. தனபாலசிங்கம். 334, கேரவில் வீதி. யாழ்ப்பாணம். (8368)

## காவேரி சீயாக்காய் பவுடர்

சம்போ தடைசெய்யப்பட்டது என்ற கவலை வேண்டாம். இருக்கவே இருக்கிறது காவேரி சீயக்காய் பவுடர். நுரை வளம் கொண்டது. சீயாக்காய் பவுடர் என்று கேட்காதீர்கள். காவேரி சீயாக்காய் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள். (8369)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

புலோலி மேற்கு சதாவதானி கதிரவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கன கடன்

---

# அஞ்சலி

வலி கிழக்கு (தெ. பகுதி) நீர்வேலி ப. நோ கூ. சங்க தலைவர்

அமரர்

## வேலுப்பிள்ளை சின்னத்தம்பி

அவர்கள்

22-5-1994 அதிகாலை நடைபெற்ற குண்டுவீச்சில் அகால மரணமடைந்தமை குறித்து நல்லூர் ப. நோ. கூ. சங்கப் பணிப்பாளர்களும், பணியாளர்களும், எமது ஆழ்ந்த துயரையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரர் சின்னத்தம்பி அவர்களை இழந்து தவிக்கும் அவர்தம் குடும்பத்தினருடனும், அவரது அரும்பெரும் சேவையை இழந்துள்ள ப. நோ. கூ. சங்கச் சமூகத்தினருடனும் நாமும் மீளாத் துயரைப் பகிர்ந்து கொண்டு அமரருக்கு அஞ்சலி செலுத்துகின்றோம்.


திருநெல்வேலி
23-5 94

பணிப்பாளர்கள்,
பொதுமுகாமையாளர்,
பணியாளர்கள்.

(சி-9504)

---

# ஆறாம் ஆண்டு நினைவில்



"மறந்தால் தானே உன்னை நினைப்பதற்கு"

## வீரவேங்கை அசோக் (குட்டி)
## செபஸ்ரியாம்பிள்ளை டெய்சி பாலேந்திரன்

அன்னையின் அணைப்பில்: 18 . 12 . 1970

அன்னியர் அழிப்பில்: 24 . 05 . 1988

(நித்திகைகுளம் இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில்)

வாழ்வு என்று வாழ்வதற்கு வளமான வாழ்விருந்தும்
அன்னியரை அடக்க ஆர்வமாய் புறப்பட்டாய்
அசோக் என்று நாமிருக்க குட்டியாக நீயிருந்தாய்
மண்ணை நீ நேசித்தாய் மானமுடன் போரிட்டாய்
சின்னவன் நீ சீற்றமுடன் போரிட்டு
நித்திகைக் குளத்தில் நீ நிரந்தரமாய் உறைந்துவிட்டாய்,

24-05-94 இன்று செவ்வாய்க்கிழமை இவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் அனைத்து

---

இடம்பெயர்ந்தவர்களுக்கான

# முத்திரைகள் வந்த பின்பே உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான இலவச உலர் உணவு விநியோகம் அதற்குரிய முத்திரைகள் வந்தபின்பே மேற்கொள்ளப்படவுள்ளதாக யாழ் செயலக புனர்வாழ்வு பகுதி தெரிவித்துள்ளது

அத்துடன் இந்நிவாரண விநியோகத்தை துரிதப்படுத்துமுகமாக யாழ் செயலக புனர் வாழ்வுப்பகுதி சகல பல நோ. கூ. சங்கங்களுக்கும் பொருட்களை விநியோகித்து வருகின்றது.

அடுத்து பருத்தித்துறை நோக்கி வருகின்ற குமாரி கப்பலில் மேற்படி உணவு முத்திரைகள் எடுத்துவரப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இம்முத்திரைகள் வந்து சேர்ந்தவுடன் நிவாரணவிநியோகம் பல. நோ கூ. சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது-

மேலும் சித்திரை மாதத்திற்கான நான்கு கட்ட உலர் உணவுப் பொருட்களையும் சேர்த்து வழங்க யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதி நடவடிக்கை எடுத்துள்ளது-

இருந்தும் சித்திரை மாதத்தில் இருந்து நேற்று வரை இடம் பெயர்ந்தவர்களுக்கு இலவச நிவாரணப் பொருட்கள் கிடைக்கப் பெறாமையினால் அவர்கள் பெரும் கஷ்ட நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது (பா) (நி)

# நாளைசான்றிதழ்

யாழ்: பிரதேச செயலர் பிரிவு கிராம அபிவிருத்தி திணைக்கள மாதர் அபிவிருத்தி நிலையம் நடாத்தும் கொழும்புத்துறை தையல் மனையியல், கைப்பணி கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும் புதன் காலை 10மணிக்கு கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதி மாதர் அபிவிருத்தி நிலையத்தில் நடைபெறும்

# நரோமா பயணிகள் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

24 ஆம் திகதி புறப்படவிருந்த "நரோமா" கப்பல் பயணிகளை 25 ஆம் திகதி மதியம் 12-மணிக்கு பருத்தித்துறை இறங்கு துறைக்குத் தவறாது சமுகம் கொடுக்கும் படியும் அன்றைய தினம் நரோமா கப்பல் பருத்தித்துறை துறைமுகத்திற்கு காலை வந்து மாலை பயணிகளுடன் புறப்படும் எனவும் அரச அதிபர் அறிவித்துள்ளார் தொடர்ந்தும் நரோமா கப்பல் ஒவ்வொரு பயணத்திற்கும் பருத்தித்துறை துறைமுகத்திற்கு வரும் எனவும் அடுத்த பயணம் யூன் மாதத்தில் 6 ம் திகதி அல்லது 7 ம் திகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது;

# வாகரையில் தமிழர் வீடுகள் ராணுவத்தினரால் தீக்கிரை

(வாகரை)

வாகரைப் பகுதியைச் சேர்ந்த பனிச்சங்கேணி கிராம மக்கள் கடும் பட்டினி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

இக் கிராமம் சிங்களஇராணுவத்தினரால் அண்மையில் சேதமாக்கப்பட்டது தெரிந்ததே. இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து அகதிகளாக்கப்பட்ட அறுபது குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கு இருவாரங்களுக்கு மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களின் வீடு, தோணி மற்றும் வலை போன்றவை இராணுவத்தினரால் எரித்து நாசமாக்கப்பட்டிருக்கும் அதே சமயம் அவர்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இரு வழித்தட பஸ்களில் இராணுவக் கெடுபிடிகள்

(யாழ்ப்பாணம்)

கொட்டாஞ்சேனாவிற்கும் ராவத்தாவத்தவிற்குமிடையில் சேவையிலீடுபடும் 102 வழி இலக்கமுடைய பேருந்திலும் மட்டக்குழியிற்கும் ரட்மலானைக்கும் இடையில் சேவையிலீடுபடும் 155 வழி இலக்கமுடைய பஸ்களிலும் பிரயாணம் செய்ய வேண்டாமென அனுபவப்பட்ட தமிழர்கள் மற்றவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

இப்பாதைகளில் சேவையிலீடுபடும் மேற்படி வழி இலக்கம் கொண்ட பஸ்களில் பிரயாணம் செய்யும் தமிழர்கள் சிறிலங்கா இராணுவத்தாலும் பொலிசாராலும் கைது செய்யப்படுவதாகவும் அவர்கள் பெரும் சித்திரவதைக்காளாவதாகவும் சம்பந்தப்பட்ட பஸ்களில் பிரயாணம் செய்து அனுபவப்பட்ட பலர் தெரிவிக்கின்றனர்

இதே வேளை இங்கிருந்து கொழும்பு செல்பவர்களுக்கும் வெளிநாடுகளிலிருந்து கொழும்பிற்கு வருபவர்களுக்கும் 102,155 வழி இலக்கமுடைய பஸ்களில் பிரயாணம் செய்ய

வரும் சிலருக்கு வெளிநாடுகளில் வைத்தே மேற்படி வழி இலக்கம் கொண்ட பஸ்களில் பிரயாணம் செய்ய வேண்டாமென எச்சரிக்கப்படுவதாகவும் தெரியவருகின்றது

(சி, தி)

# பரீட்சை கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள வர்த்தக மாணவர்களுக்கான முன்னோடி பரீட்சைக் கருத்தரங்கு ஒன்று நாளை புதன் கிழமை காலை எட்டு மணி முதல் ஐந்துமணிவரை பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

வர்த்தக மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமுகமாக பல்கலைக் கழக வணிக முகாமைத்துவ மாணவர் மன்றம் இக்கருத்தரங்கினை ஒழுங்கு செய்துள்ளது. இக் கருத்தரங்கில் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் பலர் கருத்துரை வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் ஆகஸ்ட்டில் நடைபெறவுள்ள பரீட்சைக்கு தோற்றவுள்ள வர்த்தகமாணவர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளலாம் என மேற்படி மன்றத் தலைவர் தெரிவித்துள்ளார்.

# இல்ல தடகள போட்டி

சன்மார்க்க மகா வித்தியாலயத்தின் இல்லத் தடகளப் போட்டிகள் நாளை பிற்பகல் 2. 00 மணியளவில் வண்ணை வெங்கடேச வரதராசப் பெருமாள் ஆலய வீதியில் அதிபர் க. தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். நல்லூர் கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி புலேந்திரனும் சிறப்புவிருந்தினராக தமிழீழக் கல்வி மேம்பாட்டு பேரவையைச் சேர்ந்த க. அருணும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மென்பந்து கிரிக்கட்

# நினைவு கூருகின்றோம்.
## 24.05.1994

1984-ம் ஆண்டு இத்தினத்தில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்,

1985-ம் ஆண்டு திருமலை - பன்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 09 தமிழர்கள்

1987-ம் ஆண்டு மட்டு - தாண்டியடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

றிச்சாட் (செல்லத்துரை கிருபைராசா - மட்டு)

இதே ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

செல்வன் (நடராசா லிங்கரெட்ணம் - பாலம் போட்டாறு - திருமலை)

தானி கதிரவேற்பிள்ளை ஐக்கிய நாணய சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் ஏழாவது வருடாந்த பொதுக் கூட்டம் திரு ச. விசுவநாதன் தலைமையில் மேற்படி சங்க மண்டபத்தில் நாளை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் என செயலாளர் திரு. ஆ. வேலும்மயிலும் தெரிவித்தார். (யோ)

## பரிசு பெற்றவர் விபரம்

சரசாலை - நுணுவில் அருள்மிகு ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தினை முன்னிட்டு சரசாலைஇந்துமன்றத்தால் ஒரு பேச்சுப்போட்டி அண்மையில் ஆலய மண்டபத்தில் இந்து மன்றச் செயலாளர் திரு க. சிவசங்கரநாதன் தலைமையில் இடம் பெற்றது. இப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம்:

பாலர் பிரிவு- முதலாமிடம் செல்வி க. பிரசாந்தி இரண்டாமிடம் செல்வி ம. மிருணா மூன்றாமிடம் செல்வி தே. லமீர்தா

ஆரம்ப பிரிவு- முதலாமிடம் செல்வி செ. கலாவாணி இரண்டாமிடம் செல்வி ப சாளினி மூன்றாமிடம் செல்வி ம. அருணா

கீழ்ப் பிரிவு- முதலாமிடம் செல்வி இ. ராஜேஸ்வரி இரண்டாமிடம் செல்வன் த. சௌரிகரன் மூன்றாமிடம் செல்வி பா. அஜிந்தா

மத்தியபிரிவு- முதலாமிடம் செல்வி பே. சசிரேகா இரண்டாமிடம் செல்வி ச. சத்தியபானு மூன்றாமிடம் செல்வி க. நளாயினி

மேற்பிரிவு முதலாமிடம் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் செல்விகள் சி நிரஞ்சனா, ஞ- ஜெயறாஜி க. மதனாஜி மேற்படி போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது. (24)


24-05-94 இன்று செவ்வாய்க்கிழமை இவரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் அனைத்து போராளி நண்பர்களையும் தவறாது சமுகம் தரும்படி வேட்டுக்கொள்கிறோம்;

- குடும்பத்தினர்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(8363)

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி கெங்காதேவி துரைராஜசிங்கம்

தோற்றம்: 14 . 08 . 1955
மறைவு: 14 . 06 . 1992

திதி - 24 . 05 . 94

ஆண்டு இரண்டு சென்றதம்மா
ஆறவழி காண வழி காணவில்லை
அன்புக்கு வரம்பானாய்
அருள் காட்டி ஆதரித்தாய்
பெண்மைக்கு ஒளி தந்தாய்
விண்புகுந்து விட்டாயே
என் செய்வோம்? இரங்கி நிற்கும்
எமைக்காக்க வாராயோ?

இந்துமகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்.
(சி-9501)
கணவன், பிள்ளைகள்,
உறவினர்.

## மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டி

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகம் தனது இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடாத்தும் மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில் பொற்பதி விளையாட்டுக்கழகம், கிட்ஸ் விளையாட்டுக்கழகம், ஆர், வே விளையாட்டுக்கழகம், சிற்றம்பலம் விளையாட்டுக்கழகம், வாலையம்மன் விளையாட்டுக் கழகம், கிறீன்கிங்ஸ் விளையாட்டுக்கழகம், மஞ்சவனப்பதி விளையாட்டுககழகம், கொழும்புத்துறை விளையாட்டுக்கழகம் என்பவை பங்குபற்றவுள்ளன ஆறு பேர்களைக் கொண்ட அணியின் ஏழு ஓவர்களைக் கொண்ட ஆட்டமாக இவை இடம்பெறவிருப்பது குறிப்பிடத்தக்கது

## கொட்டில்கள் சீர்குலைவு

(தொல்புரம்)

தொல்புரம் பாணாவெட்டி இடம்பெயர்ந்தோர் முகாமிலுள்ள குசினிக் கொட்டில்கள் பல காலமாக வேயப்படாத நிலையில் சுகாதாரச் சீர்கேடுகள் உருவாகியுள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி முகாமிலுள்ள குசினிக் கொட்டில்கள் சீர்குலைந்துள்ளதால் பல இன்னல்களுக்கு மத்தியில் அங்குள்ள மக்கள் தமது உணவினை தயாரித்து வருகின்றனர் இதனால் சுகாதாரக் குறைபாடுகள் ஏற்பட்டு குழந்தை முதல் பெரியவர்வரை நோய்வாய்ப்படும் அபாயம் தென்படுகிறது

இது சம்பந்தமாக அரச நிறுவனங்களோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ இதுவரை உதவிக்கு முன்வரவில்லையெனவும், இந்த பரிதாபகரமான நிலையை போக்க யார் முன்வருவார்களோ எனவும் அங்குள்ள இடம் பெயர்ந்த மக்கள் அங்கலாய்க்கின்றனர் (41)

102,155 வழி இலக்கமுடைய பஸ்களில் பிரயாணம் செய்ய வேண்டாமென கொழும்பிலிருப்பவர்கள் எச்சரிக்கின்றனராம் இதேவேளை வெளிநாடுகளிலிருந்து கொழும்பிற்கு

---

## கண்டெடுப்பு

ஆர் சதானந்தராசா என்பவருக்கு சொந்தமான இலங்கை வங்கிக் காசோலையொன்றும், பி. திருஞானசம்பந்தர் என்பவருக்கு சொந்தமான நியூசிலாந்து வங்கி காசோலையொன்றும் கண்டெடுக்கப்பட்டு எமது அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## வைகாசி விசாகம்

(குருநகர்)

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் சிறீ நாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் இன்று வைகாசி விசாகவிழா பூசை சிறப்பாக நடைபெற இருக்கிறது- (21)

## ஆட்டோ ரிக்ஷா எடுத்துவரப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு இரண்டு ஆட்டோ ரிக்ஷாக்கள் எடுத்துவரப்பட உள்ளது.

சில தினங்களில் இந்த ஆட்டோரிக்ஷா இரண்டும் 'வாதுவ'கப்பலில் எடுத்துவரப்படும் என்று தெரிவிக்கப் பட்டது

தூர இடங்களில் இடம் பெயர்ந்த முகாம்களில் வசிக்கும் மக்களின் மருத்துவ தேவைக்காக பயன்படுத்தப்படும் என இணையத் தலைவர் தெரிவித்தார். (தி) (சி)

...சமரில் வீரச்சாவெய்திய,

✠ செல்வன் (நடராசா லிங்கரெட்ணம் - பாலம்போட்டாறு - திருமலை)

✠ மணியண்ணன் / செல்வன் (வே: தெய்வநாயகம் - முள்ளிப் பொத்தானை திருமலை)

1988-ம் ஆண்டு மணலாறு நித்திகைக்குளம் பகுதியில் இந்தியப்படையினருடான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். விக்கி** (மேகவர்ணசாமி சிறிகிருஷ்ணன் - நெடியகாடு, வல்வெட்டித்துறை யாழ்)

**குட்டி / அசோக்** (செபஸ்தியாம்பிள்ளை டிசி பாலேந்திரன் - நவாலி தெற்கு - மானிப்பாய்)

யாழ் - சாவகச்சேரி, கல்வயல் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் நகுலன்** (வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன் மீசாலை வடக்கு, கொடிகாமம் - யாழ்)

1992-ம் ஆண்டு மட்டு - ஊத்துச்சேனையில் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த,

**இரவீந்திரன் / பரீத்** (ஏகாம்பரம் லிங்கநாதன் - குருமன் வெளி - மட்டு)

திருமலை - கட்டைப்பறிச்சான் பகுதியில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் பலியான 12 தமிழர்கள்:

1993-ம் ஆண்டு மணலாறு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் மருது / திவாகர்** (சந்தையா கைலாயநாதன் நல்லூர், பூநகரி - மன்னார்)

கிளாலிக் கடற்பரப்பில் பயணிகள் மீது தாக்குதல் மேற்கொள்ள முற்பட்ட சிறிலங்கா கடற்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**கடற்புலி லெப். சேகர்** (காளிமுத்து மனோகரன்- (மாத்தளை) - கிளிநொச்சி)

**கடற்புலி கப்டன் சாஜகான்** (லூர்து சேவியர் சிலன் - குடத்தனை - வடமராட்சி கிழக்கு)

**கடற்புலி லெப். மணியரசன்** (பொன்னம்பலம் ரவீந்திரன் - சுப்பர்மடம் - பருத்தித்துறை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

✠ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்;**

(சி-9496)

# யாழ்ப்பாண மாவட்டத்திற்கு ஜேர்மன் 35 இலட்சரூபா உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் ஜேர்மன் ஜனநாயக குடியரசின் உதவியை பெற்று 35 இலட்சரூபா பெறுமதிமிக்க பொருள்களை யாழ் குடா நாட்டு வேலை திட்டத்திற்காக கொழும்பிலிருந்து எடுத்து வருகின்றது.

இப்பொருள்களை அரச அதிபரின் அனுமதியுடன் இங்கு எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இடம் பெயர்ந்த மக்களின் சுகாதாரத்தை பேணுவதற்காக மலசலகூடங்கள் அமைப்பதற்கு தேவையான பொருள்கள் மற்றும் கல்வனைஸ் பிளாஸ்திக் வாளிகள், இரண்டு ஆட்டோ மற்றும் கண்பார்வை அற்றவர்களுக்கான கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் இசைக்கருவிகள் தட்டச்சு இயந்திரங்கள், வீல் செயர் என்பன இப்பொருள்களுள் அடங்கும்.

இப்பொருள்களை அண்மையில் கொழும்பு சென்ற ஜேர்மன் ஜனநாயக குடியரசின் செயற்குழுவின் தலைவர் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய தலைவர் ஆகியோர்கொண்ட மூவர் கொண்ட குழுவே எடுத்து வருவதற்கான வேலைகளை செய்துள்ளது. இப் பொருள்கள் வெகுவிரைவில் கப்பல் மூலம் இங்கு எடுத்து வரப்பட உள்ளன.

(சி தி)

# சந்திரிகாவின் பத்திரிகைப் பேட்டி கட்சியில் பலருக்கு ஆச்சரியமாம்

(கொழும்பு)

பொதுமக்கள் முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை உரிய வேளையில் சுதந்திரக்கட்சி தீர்மானிக்கும் என சந்திரிகா குமாரணதுங்கா கூறியிருப்பது சிறிமாவோ ஆதரவாளர்களிடையே பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

கடந்த ஆண்டு நடந்த கட்சி கூட்டத்தில் ஜனாதிபதி வேட்பாளராக சிறிமாவோ பண்டாரநாயக்காவையே நியமிப்பது என கட்சி முடிவெடுத்தது இதை சுதந்திரக்கட்சியை பிரதானமாக கொண்ட மக்கள் முன்னணியும் ஏற்றுக் கொண்டது. இதனை தொடர்ந்து ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தையும் சுதந்திரக்கட்சி தயாரிக்கத் தொடங்கியது

இதே சமயம் சந்திரிகா குமாரணதுங்காவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கும்படி அவரது ஆட்கள் வலியுறுத்திவருகின்றனர். அண்மையில் கூட சந்திரிகா பத்திரிகை பேட்டி ஒன்றில் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை சுதந்திரக் கட்சி உரிய வேளையில் தீர்மானிக்கும் எனக் கூறியிருந்தார். அதில் மேலும், சுதந்திரக் கட்சி வேட்பாளராக சிறிமாவை நியமிக்க கட்சி எடுத்த முடிவுக்கு சந்திரிகாவின் இவ்வறிவிப்பு முரண்பாடாக உள்ளது இது சிறிமாவோவின் ஆதரவாளர்களுக்கு ஆச்சரியம் அளித்துள்ளது இந்நிலையில் கட்சியின் செயற்குழு கூடுகையில் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது உறுதி செய்யப்படுமெனக்கூறப்படுகிறது எனினும் இவ்விடயம் செயற்குழு கூட்ட நிகழ்ச்சிநிரலில்சேர்க்கப்படவில்லைஎனத் தெரிகிறது

# பாடசாலை சீர்கேடு பற்றி செய்தி வெளியிடத் தடை?

(நல்லூர்)

பாடசாலைகளில் உள்ள குறைபாடுகள், நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பாகப் பத்திரிகைகளில் அறிக்கை விடுதலை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அனைத்துக் கல்விப் பணிப்பாளர்களையும் கேட்டுள்ளார்.

அவர் அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில், பாடசாலைகளில் உள்ள குறைபாடுகள், நிர்வாகச் சீர்கேடுகள் தொடர்பாக மாணவர் ஆர்ப்பாட்டம்செய்தல், பத்திரிகைகளில் அறிக்கை விடுதல் தற்சமயம் சில இடங்களில் நடைபெறுவது அவதானிக்கப் பட்டுள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தலைமைப் பதவிக்கான போட்டி எமது கட்சிக்குள் இல்லை

## - பொதுச்செயலாளர் கூறுகிறார்

(கொழும்பு)

புதிய தேர்தல் விஞ்ஞாபனத்தை அமைக்கும் நோக்குடனும் புதிய நிர்வாகக்குழு அங்கத்தவர்களைத் தெரிவு செய்யும் நோக்குடனுமே சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி. மு. ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

லண்டன் பி பி சி யின் கொழும்புச் செய்தியாளர் எல் மொ பெர்ணாண்டோவுக்கு அளித்த பேட்டியில் மேற்படி கருத்தைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் தலைமை தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் ஏகமனதான ஒன்று அதில் எந்த மாற்றமும் இல்லை. தொடர்ந்து சிறிமாவோ பண்டார நாயக்காதான் தலைவியாக இருப்பார். இதில் எந்தவித மற்றமும் கிடையாது என்றார்

எமது கட்சியைப் பொறுத்தமட்டில் தலைமைப் பதவிக்கு எந்தவித போட்டியும் கிடையாது'

சந்திரிகா குமாரணதுங்காவுக்கும் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் இடையே எந்தப் பேதமும் ஏற்படப் போவதில்லை. அதிலும் முக்கியமாக கட்சியைப் பிளவுபடுத்த ஐ. தே. க. எடுக்கும் இம் முயற்சி எந்த வகையிலும் வெற்றி அளிக்கப்போவதில்லை என மேலும் தெரிவித்துள்ளார்.

அனுரா பண்டாரநாயக்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறிய பின்னர் கட்சி மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. எல்லோரும் ஒரே அணியில் ஒன்று திரண்டு தென் மாகாண சபையில் வெற்றி பெற்றோம். இதே போன்று காமினி திசாநாயக்கா பொது மக்கள் ஐக்கிய முன்னணியை விட்டு வெளியேறியதன் மூலம் எமக்கு பாரிய இலாபம் கிடைத்துள்ளது என்றார்.

# விளையாட்டுத்துறையிலும் கவனம்செலுத்த வேண்டும்

## பிரதிக் கல்விப்பணிப்பாளர் கருத்து

(பருத்தித்துறை)

''மாணவர்கள் கல்வியுடன் விளையாட்டுத்துறை முன்னணியில் திகழும் போதுதான் முழுமையான அறிவைப் பெற்று எதிர்காலத்தில் திடகாத்திரமான நாட்டிற்குகந்த சிறந்த பிரஜைகளாகத்திகழ முடியும் ஆகவே மாணவர்களின் விளையாட்டுத்துறை அபிவிருத்தியிலும் கூடியகவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகும்.

இவ்வாறு. தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மாதிரிக் கிராமமான அப்பன் ராஜன் நகரில் உள்ள அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் ஆரம்ப பாடசாலையின் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டியிலே உரையாற்றிய ... பருத்திகளுக்கு வேண்டிய ஒத்துழைப்புக்களைச் சிறப்பாக வழங்கி வருகின்றது எனவே இப்பகுதி மாணவர்கள் கல்வி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் இந்நடவடிக்கைகளை முழுமையாகப் பயன்படுத்தி கல்வியில் உயர்ந்து எதிர்காலத்தில் பூரணமான மனிதர்களாகத் திகழவேண்டும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் பெற்றோர்கள் அதிககவனம் செலுத்த வேண்டும் இவ்விளையாட்டுப்போட்டி மிகச்சிறப்பாக நடைபெற்றது மகிழ்ச்சிக்குரியதாகும்.

யாழ் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி. த சிங்கராஜா தமிழ் புனர்வாழ்வுக் கழக யாழ் மாவட்ட இணைப்பாளர் திரு, ரவி, திருக்குடும்ப கன்னியர்மட அருட்சகோதரி வேட்டன் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர் விளையாட்டுகளிலே வெற்றியீட்டிய வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டதையடுத்து விளையாட்டுச் செயலாளர் திரு. ஜெயம்சபாபதிநன்றியுரை நிகழ்த்தினார்

இவ்விளையாட்டுப் போட்டியிலே வள்ளுவன் (பச்சை) இல்லம் முதலாம் இடத்தை யும், பாரதி (மஞ்சள்) இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

# ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகாவை நியமிக்குக

## மாகாண சபை உறுப்பினர் மகஜர்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலின் போது பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா குமாரணதுங்காவை நியமிக்குமாறு கோரும் மகஜரொன்றில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் மாகாணசபை உறுப்பினர் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டுள்ளனர் என தெரியவந்துள்ளது.

மேல்மாகாண சபை பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் இதுவரை கையெழுத்து இட்டுள்ளதாகவும் மேலும் பல உறுப்பினர்கள் இம் மனுவில் கையெழுத்து இடுவார்கள் எனவும் தெரியவருகின்றது.


ஊர்காவற்றுறை ம.நோ.கூ. சங்கம

**பெண்கள் துவிச்சக்கர வண்டிக்கான விண்ணப்பம்**

எமது சங்கத்தில் பெண்களுக்கான துவிச்சக்கர வண்டி பெற விருப்புபவர்கள் 27-05-94-ந் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தலைமைக்காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும் முழுமையான பங்கு ரூ. 100/- செலுத்திய அங்கத்தவர்களும், ஏற்கனவே இதற்காக விண்ணப்பம் தந்தவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்

பொதுமுகாமையாளர் (சி-9505)

**தமிழீழ மாணவர் எழுச்சிநாள்**

**05 - 06 - 1994**

"மாணவர் சிறந்தால்
தாயகம் சிறக்கும்
தாயகம் சிறந்தால்
தமிழ்க் குலம் சிறக்கும்"

மாணவர் எழுச்சி நாள் சிறக்க வாழ்த்துகிறோம்

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
புனித மரியாள் வித்தியாலயம், (O.L.R.)
(8367) யாழ்ப்பாணம்

யாழ் இந்து பழைய மாணவர் சங்கம்
தொடர்ச்சியாக நடாத்திவரும்

**முழுநிலா நாட் கருத்தரங்கு**

காலம்: 24-5-1994 செவ்வாய்க்கிழமை
பிற்பகல் 3.00 மணி

இடம்: குமாரசாமி மண்டபம்

கருத்துரை I

இயற்கை அனர்த்தங்கள்
Natural Hazards

வழங்குபவர்:

திரு. இரா. சிவசந்திரன்
முதுநிலை விரிவுரையாளர்
புவியியற்துறை, யாழ் பல்கலைக்கழகம்

கருத்துரை II

தென் ஆபிரிக்காவில் நிகழ்ந்த
அதிகாரக் கைமாற்றம்

வழங்குபவர்:

திரு. எஸ். சத்தியசிலன்
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை யாழ் பல்கலைக்கழகம்

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா இ. க.

லின் விளையாட்டுத்துறை அபிவிருத்தியிலும் கூடியகவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகும்.

இவ்வாறு, தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மாதிரிக் கிராமமான அப்பன் ராஜா நகரில் உள்ள அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் ஆரம்ப பாடசாலையின் இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப்போட்டியிலே உரையாற்றிய வடமராட்சி கிழக்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.ச. செல்வராசா குறிப்பிட்டார். பாடசாலை அதிபர் திரு. மு. ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையிலே நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியிலே தொடர்ந்து உரையாற்றிய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. செல்வராசா குறிப்பிட்டதாவது.

ராஜன் நகர் பாடசாலையில் உள்ள மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு கல்வித் திணைக்களம் வேண்டிய உதவிகளையும் வளங்களையும் வழங்கி வருகின்றது புனர்வாழ்வுக்கழகமும் இக்கிராம மாணவர்களின் கல்வி அபிவி மான மனிதர்களாகத் திகழ வேண்டும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் பெற்றோர்கள் அதிககவனம் செலுத்த வேண்டும் இவ்விளையாட்டுப்போட்டி மிகச்சிறப்பாக நடைபெற்றது மகிழ்ச்சிக்குரியதாகும்.

யாழ் இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் வைத்தியகலாநிதி. த சிங்கராஜா பட்டதையடுத்து விளையாட்டுச் செயலாளர் திரு. ஜெயம்சபாபதிநன்றியுரை நிகழ்த்தினார்

இவ்விளையாட்டுப் போட்டியிலே வள்ளுவன் (பச்சை) இல்லம் முதலாம் இடத்தையும், பாரதி (மஞ்சள்) இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

## அடிப்படை தகுதியிருக்கும் அமையஊழியர் நிரந்தரம் ?

திணைக்களங்களில் வெற்றிடங்களான இடங்களுக்குத் தகுதியுடைய சமயா சமய ஊழியர்களே நிரந்தரமாக நியமிக்கப்படுவர். அடிப்படைக் கல்வித் தகுதியுடைய சமயா சமய ஊழியர்களுக்கே இந்த நியமனம் வழங்கப்படும் என்று உள்நாட்டு அமைச்சின் செயலாளர் ஒஸ் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் மூன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்க சேவையில் இருக்கும் சமயாசமய ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டும் எனப் பிரதிக்கினை வழங்கியபோதும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள ஊழியர்களுக்கு இந்த நியமனம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"தாவரும் ஜனாதிபதி தேர்தலின் போது பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகா குமாரணதுங்காவை நியமிக்குமாறு கோரும் மகஜரொன்றில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் மாகாணசபை உறுப்பினர் கையெழுத்து வேட்டையில் ஈடுபட்டுள்ளனர் என தெரியவந்துள்ளது.

மேல்மாகாண சபை பொது மக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பல உறுப்பினர்கள் இதுவரை கையெழுத்து இட்டுள்ளதாகவும் மேலும் பல உறுப்பினர்கள் இம் மனுவில் கையெழுத்து இடுவார்கள் எனவும் தெரியவருகின்றது.

## உடற்கல்வி கற்கை நெறி ஆரம்பமாகும்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் அடுத்தமாத முதல் வாரத்தில் உடற்கல்வியும் விளையாட்டுகளும் பற்றிய இருமாதகால அடிப்படைக் கற்கைநெறி ஒன்று இடம்பெறவுள்ளது. இதிலே பின்தங்கிய பிரதேசப் பாடசாலைகளில் உடற்கல்வியைப் பயிற்றுவிப்பவர்களும் சனசமூக நிலையங்கள் ஊடாக சாதாரண பொதுமக்களுக்கு உடற்கல்வியை பயிற்றுவிக்க ஆர்வம் கொண்டவர்களும் பங்கு கொள்ளலாமென்று அலகின் இணைப்பாளர் தெரிவிக்கின்றார்.

## வீதி திருத்தம்

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி பிரதான வீதி செப்பனிடப்படுகிறது.

பல காலம் திருத்தமின்றி காணப்பட்ட மேற்படி பிரதான வீதி தற்போது தற்காலிகமான மண், கல் போடப்பட்டு குண்டும் குழியுமாய் இருந்த அனைத்து இடங்களும் செப்பனிடப்படுகிறது. தார் வந்ததும் பூரணமாக இந்த வீதி திருத்தியமைக்கும் பணி தொடருமென தெரிவிக்கப்படுகிறது. (41)


வழங்குபவர்:

திரு. எஸ். சத்தியசிலன்
முதுநிலை விரிவுரையாளர்
வரலாற்றுத்துறை யாழ் பல்கலைக்கழகம்

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யா இ. க.

விளம்பர அன்பளிப்பு
கரைநகர் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கம்
(சி-9500

## தெய்வீக சுகமளிக்கும் சுவிஷேச கூட்டம்

**சுவிஷேசகர் நிரேஷன் அமிர்தலிங்கம்**
(இயேசு சந்திக்கிறார் ஊழிய ஸ்தாபகர் - கொழும்பு)

இடம்: பாரதி சனசமூக நிலைய விளையாட்டு மைதானம், திருநெல்வேலி.

நாள்: 24 - 05 - 1994 செவ்வாய்க்கிழமை.

நேரம்: மாலை 4. 00 மணி

பாவம் - சாபம், தீராத வியாதி, பில்லிசூனியகட்டின் பயம், வாழ்க்கையின் தீராத பிரச்சினைகள், விடமுடியாத தீயபழக்கவழக்கங்கள், எதிர்காலத்தை குறித்த பயம் இவற்றில் இருந்து விடுதலை வேண்டுமா?

உங்களுக்காக ஜெபிக்கப்படும். இன்றே வருவீர்.

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் வல்லமை உங்களை இன்றே விடுதலையாக்கும் இனமதபேதமின்றி அனைவருக்காகவும் ஜெபிக்கப்படும்.

வந்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வீர்.

**கல்வாரி பூரண சுவிஷேச ஊழியங்கள்**
89, பிரவுண் வீதி,
கொக்குவில். (சி-9493)

## புளொக் செய்வதற்கு நாடுங்கள்

- அச்சக வேலைக்குத் தேவையான காப்ரோன் புளொக்குகள் அனைத்தும் அழகிய முறையில் செய்து கொடுக்கப்படும்.
- பத்திரிகை விளம்பரம் மற்றும் அச்சக வேலைக்குத் தேவையான புளொக்குகளும் உடன் செய்து கொடுக்கப்படும்.
- ஸ்கிரீன் பிரின்ட் வேலைக்குத் தேவையான பொசிடிவ்களும் உடனுக்குடன் எடுத்து தரப்படும்.

**அழகன் புளொக் தயாரிப்பாளர்கள்**
[ஈழநாதம் அலுவலகத்திற்கு அருகில்]
27/7, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.
(இ)

## இதய அஞ்சலி

**அமரர் வேலுப்பிள்ளை சின்னத்தம்பி**

தலைவர், பல நோ. கூ. சங்கம் - நீர்வேலி
உபதலைவர், வலிகாமம் கோட்ட கூட்டுறவுச் சங்கங்களின் இணையம்.

"கூட்டுறவையே நாட்டுயர்வாக எண்ணி
நற்பணியாற்றிய நல்ல தலைவா''
எம் கண்ணீர் அஞ்சலியை காணிக்கை ஆக்குகிறோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
பணியாளர்கள்.
யாழ்ப்பாணம் பல நோ. கூ. சங்கம்
23-05 94 (சி 9503)

## நன்றி நவிலல்

**செல்லப்பா நல்லையா**
[உரிமையாளர், கமலா ஸ்ருடியோ கிளிநொச்சி]

செல்லப்பா நல்லையா அவர்களின் மறைவையொட்டி 22 05-94 அன்று 8A கலட்டி அம்மன் வீதியில் உள்ள எமது இல்லத்தில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பொது உதவி புரிந்தவர்களுக்கும், அனுதாப செய்தி தெரிவித்தவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

8A கலட்டி அம்மன் வீதி, மனைவி, மக்கள்,
கே. கே. எஸ் வீதி மருமக்கள்.
யாழ்ப்பாணம். (8364)

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
(வ-து) சுன்னாகம்

## கண்ணீர் அஞ்சலி

22-5-94-ல் விமானக் குண்டு வீச்சின் போது அகால மரணமடைந்த நீர்வேலி பல நோ. கூ. சங்கத் தலைவர்,

**திரு. வேலுப்பிள்ளை சின்னத்தம்பி**

அவர்களின் பிரிவால் இன்னலுறும் குடும்பத்தினருக்கும், நீர்வேலி பல நோ. கூ. சங்கப் பணிப்பாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்களும்,
பணியாளர்களும்,
சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்
23 - 05 - 94 (சி-9502)

# வவுனியா கல்விக்கல்லூரியில் அனுமதி பெறவிருப்போர்

வவுனியா கல்விக் கல்லூரியில் 1994-ம் ஆண்டுக்கான ஆரம்ப, ஞ்ஞான - உடற்கல்விப் பயிற்சி நெறிகளில் மாணவர்களை அனுமதிக்கப் படுவதற்கான போட்டிப்பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் பின்வருவோர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்பட்டுள்ளனர். எதிர்வரும் 31ம் திகதியன்று வவுனியாக் கல்விக் கல்லூரியில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு தேசிய அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் பெறுபேற்றுச் சான்றிதழ், புள்ளிச் சான்றிதழ், மற்றும் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையின் பெறுபேற்று சான்றிதழ் என்பவற்றுடன் சமுகமளிக்கும்படி இவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

**விஞ்ஞானப் பாடநெறி ஆண்கள்**

எஸ்.ரி. சிறிபதி சாமியார் றோட், கொழும்புத்துறை, கே. ராஜேந்திரம் ஐயனார் கோயில் வீதி வண்ணார்பண்ணை; எஸ். சடகோபன் பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி; ரி சிறிமுரளி பண்டாரக்குளம் மேற்கு வீதி, ஆர். கணேசராசா சங்கானை மேற்கு. ரி சருணாகரன் உசன் மிருசுவில் எஸ். மகேந்திராசா அச்சுவேலி கே- பகீரதன் 113 இராசாவின் தோட்டம் வீதி.

**விஞ்ஞான பாடநெறி பெண்கள்**

பி. பாலசுப்பிரமணியம் கூட்டுறவு வீதி நாவற்குழி; எஸ் சிவதர்சினி முதலி கோவில் வீதி கொக்குவில்; ஆர். பிரியதாசினி கோயில் கடவை துன்னாலை மத்தி; டி. கணபதிப்பிள்ளை பருத்தித்துறை வீதி, நல்லூர்; ஏ கணேசதாசன் சுதுமலை தெற்கு; ஆர் ரூபதர்சினி கோப்பாய் வடக்கு; என் பாலசுப்பிரமணியம் அரசடிறோட், யாழ்ப்பாணம்; கே. சுஜாதா கல்வயல், சாவகச்சேரி; எஸ் சுந்தரலிங்கம் நாவலர்றோட், யாழ்ப்பாணம்; பி ஆரணி மட்டுவில் தெற்கு; ஏச் கல்யாணி செட்டித்தெரு நல்லூர்.

**உடற்கல்விப் பாடநெறி ஆண்கள்**

எஸ். அமிர்தலிங்கம் 128, இராஜேஸ்வரி வீதி, நாயன் மார்கட்டு; எஸ் ரி. லம்போ

மதி அளவெட்டி தெற்கு, எஸ். கிருபாமலர் கந்தர்மடம், ஆர் யூரியானா ஜெயந்தி அழுக்கை அளவெட்டி ஏ. எவ் மேரிகலிஸ்ரா நாவாந்துறை எஸ் சுகந்தினி பெருமாள் கடவை அளவெட்டி கே. கஜேந்தினி இணுவில் கிழக்கு எஸ். ஜெ. ஜக்குலின் சில்லாலை என் சாரதாதேவி நாவலர் றோட் யாழ் ஆர், ஏடேஸ்மன் அழுக்கை அளவெட்டி கே வி திரு அருள்மதி அளவெட்டி தெற்கு என் சசிவதனி மிருசுவில் பி. மனோகரன் நுணாவில் கிழக்கு என் பாலகௌரி சுன்னாகம், ஆர்- சுகந்தினி உடுவில் மேற்கு சுன்னாகம்

**ஆரம்பக் கல்விப் பாடநெறி ஆண்கள்**

வி நவமோகன் புதிய செங்குந்தா வீதி யாழ்ப்பாணம் வி. உதயகுமார் நாவற்காடு வரணி கே. சுதர்சன் சேர்ச் லேன் கொக்குவில் மேற்கு பி குகராஜசிங்கம் அரசடி வீதி கந்தர்மடம் எஸ் நாகேந்திரன் நியூ றோட் சந்தி காரைநகர் ஆர். ராஜரான் கொக்குவில் மேற்கு கே. தவச்செல்வன் வதிரி கரவெட்டி ஏ. தயாநிதி புதுத்தோட்டம் தெல்லிப்பழை எம் சுரேஸ் பிறவுன்றோட் யாழ்ப்பாணம் ஜே. சாள்ஸ் கெனடி கன்னாதிட்டி யாழ்ப்பாணம் ஆர் ரமேஸ்குமார் துர்க்காபுரம் தெல்லிப்பழை

**ஆரம்பக் கல்விப்பாடநெறி பெண்கள்**

எஸ். செல்வாம்பிகை புலோலி கிழக்கு பி. சத்தியமாலா குப்பிளான் கிழக்கு வி. விஜயலக்சுமி நீர்வேலி எஸ். பாலநந்தினி பருத்தித்துறை வீதி நல்லூர் வி. தீபா புளியங்கூடல் தெற்கு தி. உஷா நீலியவத்தை புலோலி ரி- ஜெயபாரதி எழுதுமட்டுவாள் வடக்கு வி. பிறேமலதா புலோலி தெற்கு வி மாலினி மிருசுவில் ரி மோகன சிறிவாணி ஊரெழு மேற்கு ஜே. ஜெயசித்திரா புலோலி கிழக்கு வி. அம்பிகா சித்தங்கேணி எம். சுவேந்திரா தேவி கரவெட்டி மேற்கு கே. மகேஸ்வரி செம்பியன்பற்று என். சிவரஞ்சினி நீர்வேலி வடக்கு, வி. சிவரூபினி புன்னாலைக்கட்டுவன் தெற்கு, எஸ் யோகநாதன் வண்ணார் பண்ணை மேற்கு, கே. சுதர்சினி சிறுப்பிட்டி கிழக்கு, எஸ். சர்மிளா கோப்பாய் வடக்கு, ஏ பிறேமினி கரவெட்டி மத்தி, எஸ் கோமதி சிறுப்பிட்டி மத்தி, ஆர். ஜெயதேவி பண்ணாகம் தெற்கு, தி நந்தினி வேம்படி காரைநகர், கே அனுகா இணுவில் மேற்கு, என். சித்திரகலா அளவை தெற்கு, ஏ சுசிலா கரணவாய் தெற்கு, ஏ ஜே அந்தோனிப்பிள்ளை பழையபூங்கா வீதி யாழ், என் சரோஜா பாசையூர், எஸ் வனிதா வராத்துப்பளை, எஸ். சுபாசினி மானிப்பாய்றோட் உடுவில், கே சேது வளலாய் மேற்கு, பி. கந்தசாமி துன்னாலை கிழக்கு, எம். மனோகரி உரும்பிராய் தெற்கு, ஆர். லலிதா புலோலி தெற்கு, கே. பாகவதனி சின்னக்கடை யாழ்ப்பாணம், பி. மரிலின் தாவடி.

## உல்லாச பயணத்திற்கு எம்.ஐ. 17 ஹெலிகள்

(கொழும்பு)

உள்நாட்டு, வெளிநாட்டு உல்லாசப்பயணிகளின் உள்ளூர் சவாரிக்கு உலகில் மிகப் பெரிய ஹெலிகப்டர் சேவையான எம். ஐ 17 இன ஹெலிகப்டர் சேவையை தற்போது லங் எயார் நிறுவனம் ஆரம்பித்துள்ளது.

இந்தரகஹெலிகளில்மேலும் மூன்று இராட்சத ஹெலிகளை நிறுவனம் விரைவில் இறக்குமதி செய்யவுள்ளது. கடலில் விபத்தில் சிக்குவோரை காக்கவும் வெள்ளத்தில் சிக்குவோரைக் காக்கவும் இந்த ஹெலிகளை பயன்படுத்த மேற்படி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

கடல் மட்டத்திலிருந்து 500 அடி உயரத்தில் அதிவேகமாக பறக்கக்கூடிய இந்த ஹெலிகள் ரஷ்ய தயாரிப்பாகும். இராணுவம் எம். ஐ 8ரக ஹெலிகளை தருவித்துள்ளது. குறிப்பிடத்தக்கது.

## கண்டெடுப்பு

மகாலிங்கம் இந்திராணி என்பவரது அடையாள அட்டையும் மகாலிங்கம் என்பவ

## வகுப்பு

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களமும், வலி தெற்கு (உடுவில்) பிரதேசசெயலகமும் இணைந்து நடாத்தும் அறிவூட்டல் வகுப்பு ஆரம்ப வைபவம் கடந்த புதன் பிற்பகல் 4.30மணிக்கு யா/மல்வத்தை றோ.க த க.பாடசாலையின் அதிபர் திரு. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு. எஸ் சி.எஸ். சிதம்பரநாதன், உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு எஸ். சிவபாதம், உடுவில் பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு. சி. தேவராஜா, உதவி பங்குத்தந்தை அருட்திரு அந்தோனிப்பிள்ளை, ஞானப்பிரகாசர் சனசமூக நிலைய தலைவர் திரு அல்பிரட் ஆகியோர் கலந்து உரையாற்றினர்

## ஓய்வூதியக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியம் பெறுவோருக்கான மே மாதக் கொடுப்பனவு தற்போது அடைக்கலமாதா தேவாலயத்திற்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுகின்றது. (22)

# இந்திய வம்சாவளி மக்களும் சமவுரிமையுடைய பிரஜைகளே

**அமைச்சர் தொண்டமான்**

இலங்கை வாழ் இந்திய வம்சாவளியினராகிய நாம் இரண்டாந்தர பிரஜைகளல்ல. இந்நாட்டில் வாழும் பெரும்பான்மை சிங்களவர்களுக்கு சமமாக உரிமைகளை பெற்றுள்ளோம். பெரும்பான்மையின மக்களுக்கு இந்நாட்டில் உள்ள சகல உரிமைகளும் எம்மக்களுக்கும் உண்டு. அதே சமயம் பெரும்பான்மையினர் தமது பிரஜாவுரிமையை உறுதிப்படுத்த எந்த ஓர் ஆவணமும் சமர்ப்பிப்பதில்லை. இதே போன்ற நிலையை நாமும் உருவாக்க வேண்டும் என அமைச்சர் தொண்டமான்கூறியுள்ளார்.

இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மக்கள் தாம் பெற்ற உரிமையை அனுபவித்துச் கொள்ளவும் பெரும் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர் நாம் இலங்கைப்பிரஜைகள் என்பதை உறுதிப்படுத்த பிராஜாவுரிமை சான்றிதழை சமர்ப்பிப்பவர்களாக இருக்கக் கூடாது வேண்டுமானால் தற்காலிக ஏற்பாடு ஏதாவது செய்யலாம். அதே சமயம் தொடர்ந்து இந்நடவடிக்கையை மேற்கொள்ளக் கூடாது மலையக மக்கள் தொடர்பாக இ.தொ.கா அரசுடன் பேசுச் நடத்துகின்றது இது இன்னமும் முடிவடையவில்லை. நாம் அனைவரும் ஒருமுகமாக செயற்பட வேண்டும் எனவும் தொண்டமான் மேலும் தெரிவித்தார்.

## அத்தியாவசியப்பொருள்கள் களஞ்சியப் படுத்தவேண்டும்

**கூட்டுறவு சமாசம் தீர்மானம்**

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருள்கள் நீண்டகாலத்திற்குரியதாக பெரியளவில் இல்லாத காரணத்தினால் இடையிடையே இப்பொருள்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது இதனால் வர்த்தகர்கள் சில அத்தியாவசிய பொருள்களை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர் என்று யாழ் கூட்டுறவு சங்கங்களின் சமாச வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ் மாவட்டத்தில் அத்தியாவசிய பொருள்கள் யாவும் குறைந்தது ஆறு மாதங்களுக்கு நுகர்வோரின் தேவையை பூர்த்தி செய்யக் கூடிய அளவிற்கு களஞ்சிய அறைகளில் சேமித்து வைக்கப் பட்டிருக்க வேண்டும் என்று தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றபோதிலும் சில பொருள்கள் மிகக் குறைந்தளவில், குறிப்பிட்ட காலத்திற்குப் போதுமான அளவிலேதான் உள்ளன.

இதனால் இப்பொருள்கள் திடீர் என்று முடிந்து போகின்றன. இதனால் இப்பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

சீனி போன்ற பொருள்களுக்கு இடையிடையே தட்டுப்பாடு நிலவுவது இதனாலேயே- சம்பந்தப்பட்டவர்கள் தட்டுப்பாடான பொருள்களை கூடிய அளவில் கொள்முதல் செய்து களஞ்சியப்படுத்துவதில் ஈடுபட வேண்டும் என்றும் அவ்வட்டாரங்கள் கேட்டுக் கொண்டன.

## மகோற்சவம்

சுழிபுரம் பறாளாய் அருள்மிகு ஸ்ரீசிவசுப்பிரமணிய தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் கடந்த 14ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இன்று முற்பகல் 11.30 மணியளவில் தேர்த் திருவிழாவும். நாளை காலை 9 00 மணியளவில் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



## ஓராண்டு நினைவலைகள்

மலர்வு:

14 - 05 - 1976

வீரச்சாவு:

24 - 5 - 1993



**லெப்டினன்ட் மணியரசன்**

**(பொ. ரவீந்திரன்)**

மண்ணின் விடுதலைக்காய் மானம் பெரிதென்று

இரா. ஜேஸ்வரி வீதி, நாயன் மார்கட்டு; எஸ் ரி. லம்போதரன் கச்சாய்றோட்; சாவகச்சேரி; றி. பாலகுமார் உடுவில் கிழக்கு; எஸ். கே. சுரேஸ் குமார், விநாயகர் வீதி, நல்லூர்; எஸ் டினேஸ் பிள்ளையார் வீதி, அளவெட்டி; எம் இராசலிங்கம் உடையார் றோட், கொடிகாமம்; எஸ். விபுலன் மீசாலை வடக்கு கொடிகாமம்; எஸ். சிவதர்சன் உடுப்பிட்டி; பி. பிறேமசீலன் தாவடி தெற்கு; வி. இளங்குமரன் வட்டுக்கோட்டை மேற்கு;

உடற்கல்விப் பாடநெறி பெண்கள்

ரி. தபோதினி கச்சாய் றோட் ஆர். ஐரீன் மரியா அழுக்கை அளவெட்டி எஸ். திமோகரணி புகையிரத வீதி யாழ்ப்பாணம், ஆர். அருள்

## கருத்தரங்கும் தெருக்கூத்தும்

யாழ்ப்பாணம்)

சீதனத் தடைச் சட்டத்தின் அவசியம் பற்றியும், அனுகூலங்கள் பற்றியும் விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவின் தீவகக் கோட்டத்தினரால் தீவக மக்கள் தங்கியுள்ள குடியிருப்புகளிலும் தீவகக் கோட்டப் பாடசாலைகளிலும் 'கருத்தரங்குகள்' நடாத்தப்பட்டு வருகின்றன. இம்மாதம்19-ம் திகதி தொடக்கம் நடாத்தப்படும் இக்கருத்தரங்குகளில் தமிழீழ மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி அவர்கள் கருத்துரை வழங்குவதோடு கலை பண்பாட்டுக் கழக தீவகப் பிரிவினரின் 'சீதனப்பேயை ஒழிப்போம்' என்னும் தெருக்கூத்தும் இடம் பெறுகின்றது.

என்பவரது அடையாள அட்டையும் மகாலிங்கம் என்பவரது உணவுமுத்திரையும் கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## சத்துணவுக்கூடம் ஆரம்பமாகிறது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலக போசாக்குக்குழுவும் வடமராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து பருத்தித்துறையில் ''சத்துணவுக்கூடம்'' ஒன்றைத் திறந்து மக்களுக்குச் சத்துணவை வழங்கவுள்ளன இச் சத்துணவுக் கூட திறப்பு விழாவும் ஆரம்ப நிகழ்ச்சிகளும் பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெற (22)வுள்ளது.



## கப்டன் நகுலன்

( வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன் )

மலர்வு : 30 - 11 - 1966

வீரச்சாவு : 24 - 05 - 1988

ஆண்டு ஆறு ஆனாலுமென்ன......
கண் முன்னே உன் உருவம்
கணமும் ஓய்வின்றி கருத்திலே உன்நினைவு
எண்ணம் நிறைவேற உழைக்கின்றோம்
மண் மீட்கும் நாள் விரைவில் வரும்போது
மீண்டும் நீ உயிர்த்து விடு!

மீசாலை வடக்கு,
கொடிகாமம். (8362)

குடும்பத்தினர்

மண்ணின் விடுதலைக்காய் மானம் பெரிதென்று
வீரர்களுள் ஒருவராய் போர்க்களம் சென்று
தலைவன் வழியில் ஆணையேற்று சென்றீர்
எதிரியை விரட்டும் பணியில் இளாலி கடற்பரப்பில்
எம் இனிய மக்களை காப்பதற்காய்
வீர சுவர்க்கம் அடைந்து விட்டாயோ மணியரசா
மண்ணில் முளைக்குது மாவீர நினைவலைகள்
தணியாத தாகத்துடன் சமராடி விடுதலைக்கு
விதையான வீரனே விடுதலையை
வென்றெடுப்போம் உம் வழியில்

இவருடன் வீரச்சாவை தழுவிக்கொண்ட ஏனைய மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்.

இன்று (24-05-94) எமதில்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் சக போராளிகளையும், உற்றார், உறவினர்களையும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

சுப்பர் மடம்,
பருத்தித்துறை. (8355)

-குடும்பத்தினர்


## நம்பிக்கை!

★ சகல கைக்கடிகார வகைகள்
★ எலெக்றோனிக் மின்சாரப் பொருட்கள்
★ மணிக்கூட்டு பற்றரிகள்

இவற்றின் விற்பனை முன்னோடி

★ கைக்கடிகார வகைகள்
★ எலெக்றோனிக் பொருட்கள்

திருத்துவதில் ஓர் சிறப்புத் தேர்ச்சி

## நாணயம்! உத்தரவாதம்!

# மின்வளம்

இல 81, லெப். கேணல் சந்தோசம் தெரு
(கஸ்தூரியார் வீதி)
யாழ்ப்பாணம்.

## நியாய விலை!

உள்ளங்களை மகிழ்வூட்டும்

★ விடுதலைப் பாடல்களையும்
★ சினிமா திரைப்படப் பாடல்களையும் சிறந்த முறையில்

COMPACT DISC-ல்

பதிவு செய்து உடனுக்குடன் பெற்றிடுங்கள்

குறிப்பு: மணிக்கூட்டு பற்றரிகள் கழிவு விலையில் வியாபாரிகளுக்கு வழங்கப்படும்.
எலெக்றோனிக் மின்சாரப் பொருட்கள் நல்ல விலை கொடுத்து கொள்வனவு செய்யப்படும்

(சி 9482)

**சிந்தனைக்கு**

ஒரு பிழையை திருத்த நீ மறுக்கும் போதுதான் அது தவறாகிறது

- ஆர்லாண்டே பேட்டிஸ்ட்டா


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 24-05-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05


## அரசியலில் குழப்பமா?

இன்று அநேகரிடம் உள்ள பிரதான கேள்விகள் இனப்பிரச்சினையில் அரசின் இன்றைய நிலைப்பாடு என்ன? கொழும்பின் அரசியல் சூழ்நிலை என்ன? என்பதே ஆகும்.

இதில், கொழும்பில் அரசியற் சூழ்நிலை பெரும்பாலும் எதிர்வு கூறமுடியாத ஒன்றாக குழப்பம் நிறைந்ததாகவும் இருப்பதாகவே அங்கிருந்து வெளியாகும் தகவல்களும், பத்திரிகைக்குறிப்புக்களும் தெரிவிக்கின்றன; ஆனால், ஒன்று மட்டும் தெளிவானதாக உள்ளது ஐக்கியதேசிய கட்சிக்குள் பெரும் மாற்றங்கள் நிழ்ந்து கொண்டிருக்கின்றன / நிகழவுள்ளன என்பதே ஆகும்.

இதனை ஐ.தே.கவின்தலைமையின்வார்த்தையில்கூறுவதானால் கட்சி 'மறுசீரமைப்பு' 'தூய்மைப்படுத்துதல்' எனப்படுகின்றது. ஆனால், கட்சிக்குள் ஐ.தே.க. தலைமையுடன் முரண்பட்டுள்ளவர்கள் அரசியல் அவதானிகள் ஆகியோரின் பரிபாஷையில் கூறுவதானால் 'களையெடுப்பு' எனப்படுகின்றது,

ஆனால், இது மறுசீரமைப்பாக இருப்பினும் சரி, களையெடுப்பாக இருப்பினும் சரி இதன் முடிவில் ஐ.தே. கவின் ஒரு பகுதியினர் ஓரங் கட்டப்படவுள்ளார்கள் என்பது மட்டும் நிச்சயம், அதிலும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அணியினர் அடங்குவர் என்பது ஏற்கனவே நிச்சயமாக்கப்பட்டுள்ளது

தற்பொழுது முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அணியினரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்களா என்பதே எழுந்துள்ள அடுத்த கேள்வி ஏனெனில் பிரதமமந்திரி ரணில்விக்கிரம சிங்காவை ஓரம் கட்டுவதற்கு ஜனாதிபதி டி பி விஜேதுங்காவும் காமினி திசாநாயக்காவும் கூட்டாக முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக வெளியாகும் தகவல்களே இக் கேள்விக்கு அடிப்படையாகும்.

# ஆறு பொலிஸ் அதிகாரிகள் உபாலியை விசாரிப்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சொத்தி உபாலி வேறு ஓர் பொலீஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேசமயம் கடந்த வாரம் சொத்தி உபாலியை ஆறு வெவ்வேறு பொலிஸ் நிலைய அதிகாரிகள் விசாரணை செய்ததாக கூறப்படுகிறது. இவர்கள் தமது பகுதிகளில் நடைபெற்ற கொலை, கொள்ளை சம்பவங்கள் தொடர்பாக உபாலியை விசாரித்தனர். நீர்கொழும்பு, மீரிகம, வெலிகட, பாதுக, பொரளை, மருதானை பொலிஸ் நிலைய அதிகாரிகளே இவ்விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

அரசியல்வாதிகளுடன் தொடர்புடைய சக்தி வாய்ந்த பாதாள உலகத்தை சேர்ந்த உபாலி உட்பட 19 பேர் பொலிசாரால் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது,

## புத்தூர்சிறுப்பிட்டிபகுதியில் கிராமிய பாசறை ஆரம்பம்

தமிழீழ தாயகத்தை மீட்டெடுப்பதற்கு உதவிக்கரம் நீட்டும்பொருளாதார'போராட்டத்தினை வென்றெடுக்கும் நோக்கில் வறுமை சூழலில் சிக்கி தவிக்கும் மக்களை இனங்கண்டு அவர்களது அடிப்படை பிரச்சினையை தீர்க்கும் முகமாக சமூக, பொருளாதார, அரசியல், விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் முகமாக கிராமிய பாசறை நிகழ்வுகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

இந்த வகையில் கடந்த மாதங்கள் வடமராட்சியில் இராஜ கிராமத்திலும், தென்மராட்சி கோயிலாக் கண்டி, மறவன்புலோ கிராமத்திலும் நடைபெற்றது இச் செயற்பாட்டின் தொடர் நிகழ்வு இம்மாதம் வலிகாமம் கோட்டத்தில் 20-ம் திகதி முதல் 25-ம் திகதி வரை புத்தூர் மேற்கு வடக்கு சிறுப்பிட்டி மேற்கு, கிழக்கு ஆகிய கிராமங்களை உள்ளடக்கி நடைபெறுகின்றது இதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிராமிய மேம்பாட்டு தொடர்பான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளவுள்ளது குறிப்பிடத்தக்கது

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்

## புகைபொருள் மறுப்பு மே 31இல் அனுஷ்டிப்பு

வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தினர் எதிர்வரும் மே 31ஆம் திகதியை சர்வதேச புகைபொருள் மறுப்பு தினமாக அனுஷ்டிக்கிறது. அன்றைய தினம் தொல்புரத்தில் உள்ள இதன் அலுவலகத்திலிருந்து காலை 9 மணிக்கு புகைபொருள் மறுப்புப் பேரணி ஒன்று ஆரம்பமாகவுள்ளது.

இப்பேரணி பிரதான வழிகளூடாக யாழ்ப்பாணத்தை சென்றடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## உணவுவிடுதி முகாமைத்துவ கற்கைநெறிகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், யாழ் பல்கலைக்கழக புறநிலை படிப்புகள் அலகினரும் இணைந்து உணவு விடுதிகளுக்கான முகாமைத்துவமும் பொதுச் சுகாதாரமும் என்ற கற்கை நெறியை சென்ற மாதம் 24-ம் திகதி முதல் நடாத்தி வருகின்றனர்

உணவு விடுதிகளை திறம்பட நடாத்துவதற்குத்தேவையான உள்ளீடுகளைப்பெற்றுக் கொள்ள முடியாத இச் சூழ்நிலையில் உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு பாவனையாளர்களைத் திருப்திப்படுத்தவும், பொதுச் சுகாதாரத்தைப் பேணவும், முதலீட்டாளர்கள் நன்மை பெறக்கூடிய வகையிலும் இக் கற்கை அமைந்துள்ளது

இக்கற்கை நெறி சம்பந்தமாக யாழ் [illegible] சாலை உரிமையாளர்களுக்கும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினருக்குமிடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக் கற்கை நெறியில் சகல உணவுச்சாலைஉரிமையாளர்களும் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்.

இக் கற்கை நெறியில் வழங்கப்படும் சான்றிதழை உணவுச்சாலைகளில் பார்வைக்குவைக்க வேண்டும் சுகாதாரப் பகுதியினர் சோதனைக்குட்படுத்தும் போது காண்பித்தல் வேண்டும்.

கற்கை நெறியில் வழங்கப்படும் ஆலோசனைக்கு அமை [illegible]

## சுகாதார பரிசோதனை

கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இயங்கும் இறைச்சிக் கடைகளில் மாடுகள் வெட்டப்படும் முன்னர் அவை குடியிருப்பில் சுகாதார நலனைப் பேணிவரும் பொதுசுகாதாரப் பரிசோதகரினால் பார்வையிடப்பட்டபின்னரேவெட்டப்படுகின்றனஇறைச்சிக்குவெட்டுவதற்காக கொண்டுவரப்படும் மாடுகள் பொது சுகாதாரப் பரிசோதகரான ஆறுமுகநாதனால் பார்வையிடப்பட்டு, பரிசோதிக்கப்பட்ட பின் அவை வெட்டுவதற்கு அருகதை உடையவை என அனுமதிக்கப்பட்டால் மட்டுமே வெட்டப்படுவதாகவும் மாட்டை பார்வையிடாமலோ அல்லது அனுமதி வழங்காத மாட்டை வெட்டுவதோ பிரஸ்தாப இறைச்சிக் கடைஉரிமையாளர்கள் குற்றப் பணம் செலுத்துவதற்கு வழிவகுக் [illegible]

## தமிழ்த்தின விழாவின் இருநாள் நிகழ்வுகள்

(குருநகர்)

யாழ் திருமறைக்கலா மன்றம் நடாத்தும் தமிழ்விழா இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் இன்று செவ்வாய் காலை 9.00 மணிக்கு நாவலர் கலாசாரமண்டபத்திலும், மாலை நிகழ்ச்சிகள் 6 00 மணிக்கு யாழ் பிரதான வீதி மன்றஅரங்கிலும் ஆரம்பமாகும்:

காலை 9 மணிக்கு 'கவிதை பற்றிக் கதைப்போம்' என்னும் கருத்தரங்கு நாவலர் கலாசார மண்டபத்தில் வித்துவான் க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும்.

கவிஞர் இ. முருகையன், சோ. பத்மநாதன் திரு.என். சண்முகலிங்கன், கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோர் கவிதை பற்றி பேசுவர்

மாலை 6 மணிக்கு மன்ற அரங்கில் யாழ் பிரதேசச் செயலர் திரு க குணராசா தலைமையில் தமிழ்விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை ஆசியுரையையும், பிரம்மஸ்ரீ சி வை. நித்தியானந்த சர்மா சிறப்புரையையும் ஆற்றுவர்

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும்

திரு பொன் சுந்தரலிங்கம் தமிழிசை விருந்தளிப்பார் மன்றஇசையமைப்பாளர், 'இசைத்தென்றல்' எம் தேசுதாசன் இலக்கியஇசையமுதம் வழங்குவார்

யாழ் திருமறைக்கலா மன்றம் நடாத்தும் தமிழ் விழாவின் மூன்றாம் இறுதி நாள் நிகழ்ச்சிகள் நாளை புதன் காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்திலும் மாலை 6 மணிக்கு யாழ் பிரதான வீதி,மன்ற அரங்கிலும் ஆரம்பமாகும்

கலாநிதி நா சுப்பிரமணியன் காலை நிகழ்ச்சிகளுக்கும் உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா மாலை நிகழ்ச்சிகளுக்கும் தலைமை வகிப்பர்

நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 9 மணிக்கு 'புனைகதையாளரோடு ஒரு பொழுது' என்னும் கருத்தரங்கம் நடைபெறும்

கலாநிதி க குணராசா (செங்கை ஆழியான்) திரு க பாலநடராசன் (இளையவன்) அநுவை நாகராஜன், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் புனைகதை பற்றிப் பேசுவர்

மாலை 6 மணிக்கு மன்ற அரங்கில் தமிழ்விழா நிகழ்ச்சிகள் தொடங்கும்

ஆசியுரையை திரு என் சண்முகலிங்கனும், சிறப்புரையை பேராசிரியர் அ சண்முகதாஸ் 'நன் காணும் நாடக உலகம்' என்னும் தலைப்பிலும் வழங்குவர்

கலை நிகழ்ச்சிகளில் மன்றகவின் கலைகள் பயிலகம் வழங்கும் நவரச நடனம், மன்ற நாடகப்பிரிவு வழங்கும் 'கும்ப கர்ணன்' நாடகம் என்பன இடம்பெறும்

மன்ற கௌரவசெயலாளர் திரு சி எம் நெல்சனின் நன்றியுரையுடன் தமிழ்விழா நிறைவடையும் (21)

## தீவக கோட்ட பாடசாலை மெய்வன்மைபோட்டிமுடிவு

(யாழ்ப்பாணம்)

21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற வேலணை, ஊர்காவற்றுறைக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலானகோட்டமட்டமெய்வன்மைப்போட்டி முடிவுகள்:-

வேலணைக் கோட்டத்தில் 1ம் இடம் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம் 2ம் இடம் புங்குடுதீவு மகா வித்தியாலயம். 3ம் இடம் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்.

ஊர்காவற்றுறைக் கோட்டம்:

1ம் இடம் புனித அந்தோனியார் கல்லூரி 2ம் இடம் [illegible]

மேற்படி கோட்டங்களின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு நா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் பிரதம விருந்தினராக யாழ் கல்வி வலயம் 1-ன் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சிவானந்தன், சிறப்பு விருந்தினர்களாக வலயம் 1-ன் உதவிக் கல்விப்பணிப்பாளர் (உடற் கல்வி) திரு. அருணகிரிராஜா, தீவகக் கோட்ட அரசியற் துறையைச்சேர்ந்த திரு. முகிலன், கௌரவ விருந்தினர்களாக மாணவர் அமைப்பின் தீவகக்கோட்டப் பொறுப்பாளர்களான திரு. அ- நீ ஒப்பிலாமணி, செல்வி [illegible]

தற்பொழுது முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் அணியினரும் சேர்த்துக் கொள்ளப் படுவார்களா என்பதே எழுந்துள்ள அடுத்த கேள்வி ஏனெனில் பிரதமமந்திரி ரணில்விக்கிரம சிங்காவை ஓரம் கட்டுவதற்கு ஜனாதிபதி டி பி விஜேதுங்காவும் காமினி திசாநாயக்காவும் கூட்டாக முயற்சிகளை மேற்கொண்டுவருவதாக வெளியாகும் தகவல்களே இக் கேள்விக்கு அடிப்படையாகும்.

இந்நிலையில் கொழும்பு அரசியல் நிலை குழப்பம் நிறைந்ததாகவுள்ளது என்றே கூறமுடியும் ஆனால் இதன் முடிவு எவ்வாறானதாக இருப்பினும் ஐ. தே. க தலைமை எதிர்பார்ப்பது போல் கட்சியை உடனடியாக மறுசீரமைப்புச் செய்வதென்பது இலகுவானதுமல்ல அது கட்சிக்கு உதவக்கூடியதும் அல்ல. இதன் உச்சகட்டம் சில சமயம் ஐ. தே. கவில் சிறு உடைவுகளைக் கூட ஏற்படுத்தலாம் இருப்பினும் இதற்கான அறிகுறிகள் தற்பொழுது இருப்பதாக இல்லை.

ஆனால், ஐ. தே. கட்சிக்குள் ஏற்பட்ட அதிகாரப் போட்டியினால் இன்றுள்ள குழப்பம் போல் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தில் அதன் தலைவர்களிடம் குழப்பம் எதுவும் இருப்பதாக இல்லை இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் மாறியதற்கும் ஆதாரம் எதுவும் இல்லை.

இதனை தெளிவுபடுத்துமாப்போன்றே சிறிலங்கா இராணுவம் வன்னியில் ஒப்பரேசன் ஜயமஹவில் ஈடுபட்டது. அத்தோடு, விமானக்குண்டு வீச்சிலும் ஈடுபட்டு வருகின்றது. இதன் ஒரு பகுதியாகவே நேற்று முன்தினம் நீர்வேலியில் நடத்தப்பட்ட குண்டு வீச்சாகும். இக்குண்டுவீச்சில் அப்பாவிப் பொதுமக்கள் மூவர் கொல்லப்பட்டனர்.

இதேசமயம் இறக்குமதி செய்யப்பட்டேவரும், பெரும் தொகை நவீன ஆயுதங்கள் மூலம் இராணுவம் தன்னை நவீனப்படுத்தி வருகின்றது. அரசாங்ககட்சிக்குள் உள்ள இன்றைய குழப்பமான நிலை காரணமாக இராணுவத்தின் இவ் விரிவாக்கம் தொடர்பான அம்சங்கள் வெளிவராமல் மழுங்கடிக்கப்பட்டு உள்ளன என்பதே உண்மை நிலையாகும்.

இதன் அடிப்படையில் இன்றைய அரசியல் யதார்த்தம் பற்றிக்கூறுவதானால் ஐ. தே. கட்சிக்குள் அதிகாரப் போட்டியின் காரணமாக ஒரு குழப்பநிலை நிலவுகின்றது என்பது சரியானதே. ஆனால் இப்பிரச்சினை இன்னும் ஓரிருமாதங்களுக்குள் ஏதோ ஒரு முடிவுக்கு வந்து விடும். ஆனால், ஐ. தே. க தலைமை இனப்பிரச்சினை விவகாரத்தில் இன்னமும் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை. இராணுவத்தீர்வு பற்றியே சிந்திக்கின்றது. இந்நிலையில் கொழும்பில் நிகழும் அதிகாரப்போட்டியையும், அதனால் ஏற்பட்டுள்ள குழப்பநிலையையும் இனப்பிரச்சினை தீர்வுடன் இணைத்து சிந்திக்க யாராவது முற்படின் அது பெரும்பாலும் தவறான கணிப்பாகவே இருக்கலாம்.

நிலையில் உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு பாவனையாளர்களைத் திருப்திப்படுத்தவும், பொதுச் சுகாதாரத்தைப் பேணவும், முதலீட்டாளர்கள் நன்மை பெறக்கூடிய வகையிலும் இக் கற்கை அமைந்துள்ளது

இக்கற்கை நெறி சம்பந்தமாக யாழ், நல்லூர் வர்த்தக சங்கத்திற்குட்பட்ட உணவுச்

இக் கற்கை நெறியில் வழங்கப்படும் சான்றிதழை உணவுச்சாலைகளில் பார்வைக்குவைக்க வேண்டும் சுகாதாரப் பகுதியினர் சோதனைக் குட்படுத்தும் போது காண்பித்தல் வேண்டும்.

கற்கை நெறியில் வழங்கப்படும் ஆலோசனைக்கு அமைவாக உணவுச்சாலைகள் ஒழுங்கமைக்கப்பட வேண்டும்

தை உடையவை என அனுமதிக்கப்பட்டால் மட்டுமே வெட்டப்படுவதாகவும் மாட்டை பார்வையிடவிடாமலோ அல்லது அனுமதி வழங்காத மாட்டை வெட்டுவதோ பிரஸ்தாப இறைச்சிக் கடைஉரிமையாளர்கள் குற்றப் பணம் செலுத்துவதற்கு வழிவகுக்கும் எனவும் குடியிருப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(22)

மத்திய மகா வித்தியாலயம் 2ம் இடம் புங்குடுதீவு மகா வித்தியாலயம். 3ம் இடம் வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்.

ஊர்காவற்றுறைக் கோட்டம்:
1ம் இடம் புனித அந்தோனியார் கல்லூரி 2ம் இடம் கரம்பன் சண்முகநாதன் மகா வித்தியாலயம் 3ம் இடம் காரை யாழ்ற்றன் கல்லூரி.

ளர் (உடற் கல்வி) திரு. அருணகிரிராஜா, தீவகக் கோட்ட அரசியற் துறையைச்சேர்ந்த திரு. முகிலன், கௌரவ விருந்தினர்களாக மாணவர் அமைப்பின் தீவகக்கோட்டப் பொறுப்பாளர்களான திரு. அ- நீ ஒப்பிலாமணி, செல்வி மா- வினோ ஆகியோர் கலந்து கொண்டனர் யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

# பிரெஞ்சு நீர்மூழ்கிகள் பாகிஸ்தானுக்கு கிடைக்கும்

[பாரிஸ்]

பிரான்சில் உற்பத்தி செய்யப்பட்ட மூன்று நீர்மூழ்கிக் கப்பல்களை பாகிஸ்தானுக்கு விற்பது தொடர்பான பேச்சு வார்த்தைகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன.

அறுபது கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான இந் நீர்மூழ்கிக் கப்பல்களில் எஸ். எம். 39 ரக ஏவுகணைகள் உள்ளன.

இது தொடர்பான பேச்சுக்கள் 1992இல் ஆரம்பமாகின. எஸ். எம். 39 ஏவுகணைகள் மிகவும் ஆபத்தான ஆயுதங்களில் ஒன்று இவற்றை வேறு நாடுகளுக்கு விற்க பிரான்ஸ் மறுத்துள்ளது. பிரிட்டன், சுவீடன் ஆகிய நாடுகள் தாம் உற்பத்தி செய்த நீர்மூழ்கிக் கப்பல்களை வாங்குமாறு பாகிஸ்தானை வற்புறுத்தி வருகின்றன. இது பற்றி பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர், சுவீடன்பிரதமர் கார்ள்பில்ட் ஆகியோருடன் கடந்தமாதம் பேச்சுகள் நடந்தன.

# காட்டுக்குள் வழிதவறிய சிறுவனை காப்பாற்றிய மனித குரங்கு

(பொன்)

ஜேர்மனியில் காணாமற் போன ஒரு குழந்தையை அக் குடும்பத்தினரால் வளர்க்கப்பட்ட சிம்பன்சிக் குரங்கு மீட்ட சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது. இது பற்றித் தெரிய வருவதாவது: ஜேர்மனியில் பொன் நகரிற்கு அருகேயுள்ள ஒரு கிராமத்தில் வசித்த எரிக் பேர்ண்பீல்ட் தம்பதியினருக்கு கிளவுஸ் என்ற இரண்டு வயது குழந்தை இருந்தது. இவர்கள் தம்மால் முன்னர் கண்டெடுத்த சிம்பன்சிக் குரங்கு ஒன்றையும் தம்முடன்வளர்த்து வந்தனர்

இதனால் இந்த குழந்தையும் சிம்பன்சியும் சகோதரர்கள் போல் நெருங்கிப் பழகினர். திடீரென ஒரு சமயம் இக் குழந்தை அருகிலுள்ள காட்டுக்குள் வழி தவறிச் சென்று காணாமற்போய் விட்டான். பெற்றோர் தேடுதல் குழுவிற்கு அறிவித்தனர் அக் குழுவினரும் பலத்த தேடுதல் வேட்டையின் பின் குழந்தையை காணாது தோல்வியுடன் திரும்பினர் இந்நேரத்தில் அந்த சிம்பன்சிக் குரங்கு தன்னை கட்டில் இருந்து விடுவித்துக்கொண்டு அக்காட்டினுள்ஓடிமறைந்தது குழந்தையையும், வளர்த்த குரங்கையும் ஒரே சமயத்தில் இழந்து அப்பெற்றோர்கள் பதற்றமடைந்த நிலையில் இருந்த போது இரு மணி நேரங்களின் பின் அச்சிம்பன்சி குரங்கு சிறுவனையும் அழைத்துக் கொண்டு காட்டினுள் இருந்து வந்ததைக் கண்ட அனைவரும் ஆச்சரியமடைந்தனர்.

வழிதவறிய குழந்தை களைப்பினாலும் பசியாலும் சோர்ந்து காணப்பட்டது. காட்டினுள் சந்துபொந்து அனைத்தும் தேடி அலைந்ததினால் குரங்கின் உடலிலும் காயங்கள் காணப்பட்டன எனினும் அக்குரங்கு குழந்தையை இறுக பிடித்தபடி இழுத்து வந்ததைக் கண்ட குழந்தையின் பெற்றோர் மகிழ்ச்சியடைந்தனர்.

இத்தகைய அதிசயத்தை தாம் ஒருபோதும் கண்டதில்லை கடும் குளிரில் அடர்ந்த காட்டில் ஒரு குழந்தை உயிருடன் மீட்கப்பட்டது ஆச்சரியமே என மீட்புக்குழுவினர் தெரிவித்தனர்.

# பொஸ்னிய ஆயுததடை அமெரிக்கா நீக்கும்

(வாஷிங்டன்)

அமெரிக்கா பொஸ்னியா மீது விதித்த ஆயுதத்தடையை நீக்க அமெரிக்க செனட் 50 - 49 வாக்குகளினால் கடந்த வாரம் தீர்மானம் நிறைவேற்றியது,

பொஸ்னிய முஸ்லிம்கள் சேர்பியரின் தாக்குதலில் இருந்து தம்மை பாதுகாக்கி ஆயுதத்தடையைநீக்க ஜனாதிபதி கிளின்டன் நீண்டகாலமாக விருப்பம் தெரிவித்து வந்துள்ளார் ஆனால் இது குறித்து நேட்டோ நாடுகளை அவரால் தூண்ட முடியவில்லை ஏனெனில் இவற்றில் சில நாடுகளின் அமைதிப்படை பொஸ்னியாவில் நிற்கிறது.

# ரஷ்ய - சீன வர்த்தக பேச்சு இன்று நடைபெறும்

(பீகிங்)

சீனாவும் ரஷ்யாவும் இந்த வாரத்தில் உயர்மட்ட வர்த்தக பேச்சுவார்த்தையை நடத்தத் தீர்மானித்துள்ளன. இரு நாடுகளும் பண்டப் பரிவர்த்தனையை நீக்கி விட்டு நாணய மாற்று அடிப்படையில் வர்த்தகத்தை மேற்கொள்ள முடியுமென பீகிங் நம்பிக்கை தெரிவித்துள்ளது பொருளாதாரம், வர்த்தகம் தொழில்நுட்ப ஒத்துழைப்பு தொடர்பான சீன - ரஷ்ய கூட்டு ஆணைக் குழுவின் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. சீனாவின் உதவிப் பிரதமரும், ரஷ்யப் பிரதிப் பிரதமரும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மெக்சிக்கோவில் பூகம்பம்

(மெக்சிக்கோ)

மெக்சிக்கோ நகரில் நேற்று முன்தினம் இருதடவைகள் பூகம்பம் ஏற்பட்டுள்ளது மெக்சிக்கோவின் தலைநகரங்களில் இருந்த கட்டடங்கள் அதிர்ந்ததாகவும், ஆனால் எவருக்கும் பாதிப்போ, காயமோ ஏற்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994- 05- 24
செவ்வாய் இரவு

08. 01- ஊர்சுற்றும் ஒலிவங்கி
8. 10- அறிந்துகொள்ளுங்கள்- தகவற்களஞ்சிய நிகழ்ச்சி
08. 20- நலந்தரவா - நிகழ்ச்சியில்வயிற்றுப்புண், வயிறு எரிதல் நோய்கள் பற்றிய ஆலோசனைகள்
08. 30 - செய்திகள்
08. 40- கருத்துக்களம்- ''சீரழிவு''
08. 50 களமும் கானமும்- ''புதிய விதி''

1994- 05- 25
புதன் காலை

7. 02- மாவீரவணக்கம்
7. 15 - நீங்கள் கேட்டவை
07. 30- செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# உல்லாசப்பயணி வருகையை தடுக்க சர்வதேச தொடர்பு சாதனம் முயற்சி

## தகவல் ஒலிபரப்பு அமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கைக்கு உல்லாசப் பயணிகள் வருவதை தடுத்து நிறுத்த சில சர்வதேச தொடர்பு சாதனங்கள் முயற்சி செய்து வருகின்றன என தகவல் ஒலிபரப்பு அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்தார். தென்னிலங்கையில் பாடசாலை வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

றுவாண்டா, பொஸ்னியா போலவே இலங்கையிலும் இனக்கலவரங்கள் நடப்பதாக சித்தரித்துக்காட்டும் பிரசார இயக்கத்தில் அவை ஈடுபட்டுள்ளன இதன்மூலம் உல்லாசப் பயணிகளை அச்சமடையச் செய்து அவர்களது வருகையை தடுக்க முயற்சிகள் எடுக்கப்படுகிறது இத்தகைய நடவடிக்கைகள் கண்டுபிடிக்கப்படவேண்டியவை

கொழும்பு ஹோட்டல்களில் அண்மையில் குண்டுகள் வெடித்தன. ஆனால் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடப்பதாக சித்தரித்துக் காட்டப்படுகிறது இது போன்ற தவறான தகவல்கள் உல்லாசப் பயணத் துறையை பாதிப்படையச் செய்யும் முயற்சியாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## நாளைய நிகழ்வுகள்

வடஇலங்கை சர்வோதயத்தின் திருக்குறள் அதிகார முற்றோதல் விழாவும் திருவள்ளுவர் குருபூசையும் புதன்காலை 9மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும்.

ஃ ஃ

யாழ். இலக்கிய வட்டத்தின் வைகாசி மாத முழுநிலா அரங்கு புதன் மாலை 4 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெறும் இதில்நாவண்ணனின்பொழிவு கவிதைநூல் அறிமுகவிழா இடம்பெறும்

ஃ ஃ

# பொன் கொடுத்துப் பொருள் கொடுத்து பெண்ணே! பின்னும் நீ அடிமைதானே

கல்விப் பொது தராதர (சா) தர

## கலை,செயன்முறைப்பரீட்சை ஜூன் 1-ல் ஆரம்பமாகும்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் 1993 ஆம் ஆண்டு க.பொ.த. (சா/தர) பரீட்சையின் சங்கீத மற்றும் நடன செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 1ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளதாக யாழ் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப் பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலைப் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகளை அந்தந்த பாடசாலை அதிபர்கள் எதிர்வரும் 30-ம் திகதி யாழ். கல்வித் திணைக்களத்தில் சேகரிக்கும் வண்ணமும் தனிப்பட்டபரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபாலிலும் இடப்பட்டுள்ளதாக வலயம்1 கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இப் பரீட்சைக்கு யாழ். மவட்டத்தில் சுமார் பத்து பரீட்சை நிலையங்களில் 3000பேர் வரையேயான பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

அத்துடன் இப் பரீட்சை தொடர்ந்து ஏழு நாட்கள் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டது. (பா)

மாவட்ட

பேன்ற கடன்களையும் பெற முடியும்.

இதனால் குறிப்பாக விவசாயிகள் பெரும் நன்மையைப் பெற வய்ப்புகள் ஏற்படும் என தெரிவிக்கப்பட்டது. (பா, சி)

## தனியரசிற்கான

எமது பொருண்மிய வாழ்வை அழிப்பதற்குமாக திட்டமிட்டு செயற்படுகிறான் என்பது எங்களுக்கு நன்றாகத் தெரியும் அப்படி இருந்தும் இந்த எதிரியின் சவால்களை எதிர்நோக்கிய வண்ணம் யுத்தம் ஒரு புறம் நடக்க, மறுபுறத்தில் எமது தேசத்தைக் கட்டியெழுப்புவோம். தேசம் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்ற உறுதியில் நம் செயற்பட்டு வருகின்றோம்.

இதற்கு உறுதுணையாக எமது மக்களும் எங்களுக்கு பக்கபலமாக நிற்கிறார்கள் அதனால் எதிரி தனது இலட்சியத்தின் நோக்கத்தை அடைந்து விடமுடியாமல் இருக்கிறான்.

இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் சமீபத்தில் எம்மைச் சந்தித்த ஒரு வெளிநாட்டுப் பத்திரிகையாளர் கேட்டார், இனப்பிரச்சினை தீர்த்தபாடில்லை மாறிவரும் அரசாங்கங்கள் இனப்பிரச்சினையில் அக்கறை காட்டுவதில்லை. போராட்டமோ முடிவில்லாது போய்க்கொண்டிக்கிறது. என்ன செய்யப் போகிறீர்கள், உங்களுடைய எதிர்காலம் எப்படியாக அமையப் போகிறது என்று கேட்டார். அதற்கு நான் தெளிவான ஒரு பதிலைச்சொன்னேன். போராட்டம் ஒரு புறம் நடை பெறட்டும் சிங்கள அரசு எமது பிரச்சினையில் அக்கறை காட்டாது இருந்தாலும் பரவாயில்லை, ஆனால் இங்கு படிப்படியாக தமிழ் மக்கள் ஓர் ஆட்சி அமைப்பை நிறுவிக் கொண்டிருக்கிறார்கள். எனவே படிப்படியாக பலம் பெற்றுக் கொண்டு வருகிறார்கள்இதன் இறுதிஒருதன்னாட்சியாக, தனியரசாக உருப்பெறும் சாத்தியக் கூறுகள் இருக்கிறது அப்படியான ஒரு அமைப்பை நாங்கள் கட்டி எழுப்பியுள்ளோம் என்று சொன்னேன்

முழு உலகமும் எங்களது போராட்டத்தை அவதானித்துக் கொண்டிருக்கிறது உலகத்துக்குத் தெரியும் தமிழீழ மக்கள் விடுவிக்கப்பட்டதமது பிரதேசத்தில் தங்களுக்கென்று ஓர் ஆட்சி முறையைப் படிப்படியாக அமைத்துக் கொண்டு வருகிறார்கள், எங்களுக்கென்று ஒரு காவல் துறை இருக்கிறது, நீதி நிர்வாகத்துறை இருக்கிறது.

பொதுச் சுகாதார பரிசோதகர்

# 10 வருடங்களாக தமிழர் எவருக்கும் பயிற்சியில்லை

பொதுச் சுகாதார பரிசோதகர் பயிற்சி சிங்கள மொழியிலேயே நடைபெறுவதால் வடமாகாணத்திலிருந்து எவரும் நீண்டகலமாக இதற்கான பயிற்சியை பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சுமார் பத்து ஆண்டுகளாக வடபகுதியைச் சேர்ந்த எவரும் பொதுச் சுகாதார பரிசோதகராக நியமனம் செய்யப்படவில்லை. கொழும்பில் இதற்கான பயிற்சி சிங்கள மொழியில் நடைபெறுவதால் வடபகுதியைச் சேர்ந்த எவரும் இந்தப் பயிற்சியில் ஈடுபட முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இப் பயிற்சியை பெறும் நோக்கில் கொழும்பு சென்ற சிலர் சிங்கள மொழியில் இப் பயிற்சி நடைபெறுவதை அறிந்து திரும்பி வந்துள்ளனர். (தி, ச)

# ரணில் நாடு திரும்பமுன் அமைச்சரவையில் மாற்றம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தென்கொரிய பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவதற்கு முன்னர் அமைச்சரவையில் மாற்றங்களைக் கொண்டுவர ஜனாதிபதி திட்டமிட்டுள்ளர் என அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர் நாட்டில் இல்லாத சூழ் நிலையே தனது திட்டத்திற்கு மிகவும் உகந்தது என ஜனாதிபதி கருதிய அடுத்த புதன்கிழமை அமைச்சரவை கூட்டம் கூடுவதற்கு முன்னர் இம் மாற்றங்களை செய்யத் திட்டமிட்டுள்ளார் என அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத், காணி பெருந்தெருக்கள், மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துகோரளை ஆகியோரிடம் இருந்து அமைச்சர் பதவிகள் பறிக்கப்படும் என்றும் வேறு சில உறுப்பினர்கள் இப்பதவிகளுக்கு நியமிக்கப்படலாம் எனவும் தெரியவருகின்றது.

## கிராமிய பாசறை

சிறுப்பிட்டி மேற்கு, புத்தூர் மேற்கு கிராமியப் பாசறை நிகழ்வில் இன்றைய விளையாட்டு நிகழ்வாக உதைபந்தாட்டப் போட்டியில் புத்தூர் எவறெஸ்ற் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வயவை விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

பெண்களுக்கான தாச்சிப் போட்டியில் வயவை விளையாட்டுக்கழகம், அரியாலை காந்தி விளையாட்டுக்கழகம் ஆகியன பங்குகொள்ளும்.

செற்றப் முறையிலான கரபந்தாட்டப் போட்டியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகம், ஆவரங்கால் நவோதயா விளையாட்டுக் கழகம் ஆகியன விளையாடவுள்ளன.

## மூடப்பட்டிருக்கும்

வருகிற வெள்ளிக் கிழமை விசேட வங்கி விடுமுறையானபடியால் இலங்கை வங்கி மேற்தரக் கிளை வங்கி அலுவல்களுக்காக மூடப்பட்டிருக்கும்.

## தமிழீழ

தின் கட்டுப்பாட்டில் இயங்குகிறார்கள பலமுறை நாங்கள் சொன்னோம்நாங்கள்முழுமையான பாதுகாப்பு தருகிறோம் அந்த பணத்திற்கான காப்பை நாங்கள் கொடுக்கின்றோம் இங்கே பணத்தை வைத்திருங்கள் எங்களுடைய மக்களுக்கு தேவையானவற்றை செய்யுங்கள் என்று.

ஆனால் அவர்கள் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள் இன்று வன்னிப் பகுதியிலே எடுத்துப் பார்ப்போமானால் அங்கே இருக்கின்ற 80 ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள், மன்னார், முல்லை, வன்னி மாவட்டங்களிலே உள்ள குடும்பங்களில் பெரும் பான்மையானவர்கள் விவசாயத்திலும் விவசாயத்தை சார்ந்த உழைப்பிலும் தான் தங்கி இருக்கின்றார்கள். ஆனால் அங்கே பயிர் செய்யக்கூடிய அளவிலே அவர்களிடம் முதலீடுகள் இல்லை அவர்களுக்கு வங்கிகள் அங்கே கடன் கொடுக்கவில்லை அதே நிலைதான் இங்கேயும்.

இந்த நிலையை போக்க வேண்டும் எங்களுடைய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் அதன் மூலம் எங்களுடைய போராட்டத்திற்கு ஒரு வேகத்தை கொடுக்க வேண்டும் மக்களினுடைய வாழ்க்கைத்தரம் உயருகின்றபோது போராட்டம் தானாக விரைவுபடும் என்ற நோக்கத்தினாலே நாங்கள் இதை செய்திருக்கிறோம்

மக்கள் வங்கி நிதியிலே 50 வீதமான நிதி கூட்டுறவாளர்களுடையது அப்படி இருந்தும் இன்றைய நிலையிலே கூட்டுறவாளர்கள் மக்கள் வங்கியிடமிருந்து தமக்கு முழுமையான உதவியை பெற்றுக் கொள்ளமுடியாமல் இருக்கின்றார்கள்.

இந்த நிலை எதற்காக? நாங்கள் இங்கே இருக்கின்ற மக்கள் வங்கியினுடைய ஊழியர்கள் - எங்களுடைய உடன் பிறப்புக்களை குறைகூற முடியாது அவர்கள் சிறிலங்கா அரசாங்கம் சொல்பவற்றை செய்பவர்களாகமட்டுமே இருக்கிறார்கள்

அதைத்தன் அவர்களால்

றும் விடுதலைப் புலிகள் நிதித்துறைப் பொறுப்பாளர் திரு தமிழேந்தி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்-

இதைத் தொடர்ந்து நிதி வைப்பில் இடப்பட்டது- நீண்ட வரிசையில் நின்ற நூற்றுக் கணக்கான பொது மக்களும், வர்த்தகர்களும் பணத்தினை வைப்பிலிட்டனர்.

கள்

இங்கே நாங்கள் வைப்பிலிட அதை அங்கே அனுப்பும்போது அது இரண்டு வேலைகளைச் செய்கின்றது ஒன்று எங்களுடைய மேம்பாட்டை தடுக்கின்றது மற்றது அப்பணத்தை சிறிலங்கா அரசு தன்னுடைய தேவைகளுக்கு பயன்படுத்துகின்றது தமிழ் மக்களை அழிப்பதற்காக பயன்படுத்துகின்றது

ஆக நீங்கள் சிறிலங்கா அரசுக்குகொடுக்கின்ற, அதாவது வங்கிகளில் இருக்கின்ற ஒவ்வொரு பணமும் மக்களின் அழிவிற்காக உங்களின் அழிவிற்காக பயன்படுகின்றது இந்த வைப்பகம் எங்களுடைய மக்களின் மேம்பாட்டிற்காக உங்களுக்கு தேவையான கடன் வசதிகளை செய்து கொடுக்கும் நிலையான வைப்புகளையும் சேமிப்பு வைப்புக்களையும் நடைமுறைக் கணக்கையும் நாங்கள் நடைமுறைப்படுத்த இருக்கிறோம் அதைவிட மேம்பாட்டுக் கடன்கள் அடகுக் கடன்கள் வாணிபக் கடன்கள் ஆகியவற்றை தொடக்கிவைத்துள்ளோம் அப்படி கொடுக்கின்ற போது நாங்கள் தெடங்கி

## உலகில்

யாநாட்டில் குறிப்பிடப்பட்டது- இலங்கையில் இவ்வாறான தற்கொலைகள் அதிகரிப்பிற்கான காரணம் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது-

தெற்கில் நடந்த கிளர்ச்சி கொடூரமாக அடக்கப்பட்டது உயிரின் மதிப்பை குறைத்துவிட்டது என சமூக நலன் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்-

நலன் கருதி, எமது மக்களின் நல்வாழ்வு கருதி, எமது மண்ணின் அபிவிருத்திகருதி இந்த வைப்பகத்தை நாம் உருவாக்கி உள்ளோம். இது புலிகளின் வைப்பகம் அல்ல. தயவு செய்து இதில் தெளிவாக இருங்கள் இது விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வைப்பகம் அல்ல இது தமிழ் மக்களின் வைப்பகம். இது உங்களதுபணத்தில், உங்களது நிதியில், உங்களது வருமானத்தில், உங்களது ஒத்துழைப்பில் இது கட்டி எழுப்பப்படல் வேண்டும். இது உங்களது நன்மைக்காக கட்டி எழுப்பப் படுகிறது இது எமது தேசிய அபிவிருத்தியை இலக்காகக்

கொடுக்க வேண்டும். மக்களுக்கு உதவும் முகமாக பல உன்னத இலட்சியங்களோடு இந்தக் காப்பகம் திறக்கப்படுகிறது.

இது ஒரு முதல் முயற்சி. வருங்காலத்தில் இது போன்ற வைப்பகங்கள் மாவட்ட ரீதியில் அமைக்கப்படும். தமிழர் ஒரு தன்னாட்சியை நிறுவும் ஒரு முக்கிய திட்டமாக இந்த வைப்பகம் உருவாக்கப்படுகிறது என்பதை நான் உங்களுக்கு வலியுறுத்த விரும்புகிறேன்

அதாவது இந்த வைப்பகத்தின் வெற்றி உங்களது கையில் தங்கியுள்ளது. இந்த வைப்பகத்தை வெற்றிகரமாக செய

யாழ் ஸ்ரீதரில்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகமும்

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்
கழகமும்
நிதர்சனமும் இணைந்து வழங்கும்

# மண்ணுக்காக

தினசரி மாலை 3.00 மணி, 6.00 மணி
சனி, ஞாயிறு காலை 10.30 மணி,
மாலை 3.00 மணி, 6.00 மணி

(சி-9457)


செய்பவர்களாகமட்டுமே இருக்கிறார்கள்

அதைத்தான் அவர்களால் செய்யமுடிகின்றது

இலங்கை வங்கியை பொறுத்தவரையிலும் இதுதான் நிலை- மிக அண்மைக்காலத்தில் மகளிர் பொற்கணக்கு என்றொரு கணக்கைத் தொடக்கினார்கள் கோடிக்கணக்கான பணத்தை கொழும்பிற்கு அனுப்பினார்கள் இங்கே பணத்திற்கு தட்டுப்பாடு திரவப்பணமில்லை இந்தநிலையிலே அவர்கள் கொழும்பிற்கு அனுப்பினார்கள் அவர்கள் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பதால் அதை செய்தார்

வற்றை தொடக்கிவைத்துள்ளோம் அப்படி கொடுக்கின்ற போது நாங்கள் தொடங்கியுள்ள இந்த வைப்பகம் குழந்தை பருவத்தில் உள்ள காரணத்தினாலே நாங்கள் கொடுக்கப்போகின்ற கடனுக்காக முழுமையான காப்பு நிலையொன்றை தேடிக்கொண்டு அந்த வைப்புக்களை கொடுப்போம் அப்படிப்பட்டவர்கள் எங்களுடைய வைப்பகம் வளர்ச்சி பெறவேண்டும் எங்களுடைய மக்கள் அனைத்துப்பேரும் இதன்மூலம் நன்மையடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு வைப்பிலிடவேண்டும் என்றார் (சி, பா)

எங்களுக்கென்று ஒரு காவல் துறை இருக்கிறது, நீதி நிர்வாகத்துறை இருக்கிறது, எமக்கென்று ஓர் இராணுவப் படை இருக்கிறது. ஓர் அரசிற்கு தேவையான அடிப்படைகளை எல்லாம் நாங்கள் படிப்படியாக நிறுவிக் கொண்டு வருகிறோம்.

இப்படியாக ஒரு தன்னாட்சி அமைப்பு நிறுவப்பட்டு அது நீடித்து நிற்குமானால் உலகம் எங்களை ஒரு தன்னாட்சியுடைய மக்களாக ஏற்றுக்கொள்ள வேண்டிய காலம் அணுகிக் கொண்டிருக்கிறது ஆகவே தான் போர் ஒருபுறம் நடக்கட்டும், பொருளாதாரத்தடைகள் ஒருபுறம் இருக்கட்டும், சிங்கள அரசு தான் நினைத்தது போல் ஆடட்டும் கொழும்பு அரசியல் எப்படியாவது சிதையட்டும் நாம் அதைப்பற்றி எல்லாம் அக்கறை கொள்ளத் தேவையில்லை. நாங்கள் எமது மண்ணில் எமது சுய ஆட்சியை தன்னாட்சியை படிப்படியாக அமைத்துக் கொண்டு போவோம் அதை ஒரு நிரந்தர ஆட்சியாக, எவருமே அழித்து விட முடியாத ஒரு ஆட்சியாக, நிலைத்து நிற்கும் ஓர் ஆட்சியாக உருப்பெறும் என்பதை நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன்.

அந்த இலட்சியத்தில் தான் தமிழீழ வைப்பகம் இன்று திறக்ப்படுகிறது- காலம் காலமாக சிங்கள நிர்வாக அமைப்புக்குக் கீழ் நாங்கள் இருந்திருக்கின்றோம்- சிங்கள நிர்வாக அமைப்பின் கீழ் வைப்பகங்கள் இங்கு இருந்திருக்கின்றன- எமது சொத்துக்களை எல்லாம் நாம் காலம் காலமாக சிங்கள அரச நிர்வாகத்திடம் ஒப்படைத்து வந்திருக்கிறோம்-

ஆனால் இன்றைய கால கட்டத்தில் சிங்கள அரசும், சிங்கள நிர்வாகமும் எங்களை முற்றாக அன்னியப்படுத்தி நிற்கும் இந்த வேளையில் நாங்கள் எங்களது மக்களின் நன்மைக்காக கட்டி எழுப்பப் படுகிறது இது எமது தேசிய அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு அமைக்கப்படுகிறது. எங்களதுமக்கள் இந்தவைப்பகத்தில் முதலீடுகளை செய்ய வேண்டும். பணத்தைக் காப்புறுதியாக வைக்க வேண்டும். அந்த நிதியிலிருந்து எமது தேசிய அபிவிருத்திக்கான திட்டங்களுக்குநாங்கள் கடன்

தின் வெற்றி உங்களது கையில் தங்கியுள்ளது. இந்த வைப்பகத்தை வெற்றிகரமாக செயலாக்கம் பெற செய்வதற்கு உங்களது ஒத்துழைப்பும் ஆதரவும் என்றும் தேவை அது வளர்ந்து ஈற்றில் எமது மக்களின் நல்வாழ்விற்காக எமது தேசத்தின் பொருண்மிய வளர்ச்சிக்காக உதவும் என்பது திண்ணம் என்றார்.


★ இன்று திருமறைக் கலாமன்றம் நடாத்தும் ★ இன்று

24.05.94 **தமிழ் விழா** 24.05.94

காலை 9:00 - 12.30

**காலை நிகழ்ச்சி - நாவலர் மண்டபம்**

★ கருத்தரங்கு ★

"கவிதை பற்றிக் கதைப்போம்"

தலைவர்
திரு. க. சொக்கலிங்கம் M. A.
கருத்துரையாளர்
கலாநிதி திரு. காரை. செ. சுந்தரம்பிள்ளை
திரு. இ. முருகையன் M.A.
திரு. என். சண்முகலிங்கன் M. A.
திரு. சோ. பத்மநாதன் B.A (Hons)

★ கலந்துரையாடல் ★

தமிழ் ஈழக் கவிஞர்கள் பலரும் கலந்து கொள்ள அழைக்கின்றோம்.

மாலை 6.00 மணி

**மாலை நிகழ்ச்சி - மன்ற அரங்கு**

நாதஸ்வர இசை
வரவேற்பு நடனம்
தலைமையுரை: கலாநிதி க. குணராஜா
(பிரதேச செயலாளர், யாழ்ப்பாணம்)
ஆசியுரை: புதுவை இரத்தினதுரை
(பொறுப்பாளர், கலை பண்பாட்டுக் கழகம்)
சிறப்புரை: பிரம்மஸ்ரீ சி. வை. நித்தியானந்த சர்மா

**கலை நிகழ்ச்சிகள்**

**தமிழிசை விருந்து**
திரு. பொன். சுந்தரலிங்கம்

**இலக்கிய இசையமுதம்**
திரு. எம். யேசுதாசன்
உருவாக்கலில் மன்ற இசைக் குழுவினர்

(சி-9497)


## கண்ணீர் அஞ்சலி



**திரு. வேலுப்பிள்ளை - சின்னத்தம்பி**
**செல்வி சிவதர்சினி - சின்னத்தம்பி**
**செல்வி புஸ்பராணி - கணபதிப்பிள்ளை**

22-5-94 அன்று அகால மரணமடைந்த வலி-கிழக்கு தெ. ப. ப. நோ. கூ. சங்கத்தின் தலைவர் அவர்களுக்கும், அவர் தம்மகளுக்கும் மருமகளுக்கும்எமது பாடசாலைச் சமூகம் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றது.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள், பா. அ. சங்கம்,
பழைய மாணவர் சங்கம்
யாழ் | அத்தியார் இந்துக் கல்லூரி
நீர்வேலி

(8370)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது